**லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட் கம்பனி - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட்டின் (“கம்பனி”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, ஏனைய நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினை விடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 கணக்கீட்டுப் பெறவேண்டியவைகளும் செலுத்தவேண்டியவைகளும்

### 1.5.1 பெறவேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (a.) | 31 டிசம்பர் 2021 இல் பெற வேண்டிய மொத்த கொள்கலன் வைப்புத்தொகை ரூபா.5.1 மில்லியன் ஆகும். 2002 ல் இருந்து வரவேண்டிய நீண்ட நிலுவைத்தொகையும் இதில் அடங்கும். அத்தகைய நிலுவைத் தொகையை கம்பனி இன்னும் வசூலிக்கத் தவறிவிட்டது. | கொள்கலன் வைப்புத்தொகை மீதி ரூபா. 5,083,981 இன் சார்பாக மதிப்பிழப்பு ஒதுக்கம் ரூபா. 4,408,221 ஆனது 2018 இல் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | கூடிய விரைவில் நிலுவைகளை மீட்டெடுக்க கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேணடும். |
| (b.) | ரத்துச் செய்யப்பட்ட இறக்குமதிகளுக்காக, கம்பனி 2013 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் LP எரிவாயு இறக்குமதியின் போது முறையே ரூபா 15.5 மில்லியன் மற்றும் ரூபா 29.8 மில்லியன் ஐ துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி | பெற வேண்டிய PAL ரூபா. 15.5 மில்லியன் இற்காக மதிப்பிழப்பு ஒதுக்கம் ரூபா. 15,478,747 ஆனது 2020 இல் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | கூடிய விரைவில் நிலுவைகளை மீட்டெடுக்க கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேணடும். |

வரியாக செலுத்தியிருந்தது. இருப்பினும், கம்பனியானது சுங்கத் திணைக்களத்திடமிருந்து அந்த நிலுவைகளை மீளப்பெற்றிருக்கவில்லை.

### 1.6 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னால் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு ஆகஸ்ட் 2020 இல் பூச்சிய வட்டி விகிதத்தில் ரூபா. 9.753 மில்லியன் வாகனக் கடனாக செலுத்தப்பட்டிருந்தது மற்றும் சொல்லப்பட்ட கடனில் 50% மான ரூபா. 4.876 மில்லியன் கம்பனியால் சுமக்கப்படும். எவ்வாறாயினும், பொதுத் திறைசேரியால் அந்த பதவியை மாற்றியதன் காரணமாக கடன் ஒப்பந்தத்தின் படி 5 வருட சேவையை அவர் பூர்த்தி செய்யாததால் கம்பனியின் 50% பங்கு உட்பட நிலுவையில் உள்ள மொத்த கடன் தொகை 26 யூலை 2021 அன்று முன்னால் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரியால் செலுத்தப்பட்டது. | சபை ஒப்புதலின் படி முன்னால் தலைவர், தலைவருக்கான சலுகைகளுக்கு அன்றி தலைமை நிர்வாக அதிகாரிக்கான சலுகைகளுக்கு மட்டுமே உரிமம் பெற்றிருந்தார். | தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி ஆகிய இரு முரண்பட்ட பாத்திரங்களைப் பிரிக்கவும் மேலும், ஊழியர் கடன் திட்டத்தை மதிப்பாய்வு செய்து கடன் தொகையை முழுமையாக மீட்டெடுக்கவும் மற்றும் வழங்கப்பட்ட ஊழியர் கடன்களுக்கு நியாயமான வட்டியை வசூலிக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (a.) 2018 யூலை 18 ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை எண்.03/2018 | (i.) சுற்றறிக்கையின் படி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறாமல் சம்மந்தப்பட்ட அதிகார பீடங்கள் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதையும் அவர்களது ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளை அதிகரிப்பதையும் தவிர்க்க வேண்டும். | ஊழியர்களின் சம்பள வரம்புகள் மற்றும் படித் திட்டங்கள் கம்பனியின் அமைப்பு அகவிதியின் படி கம்பனியின் தலைவர் மற்றும் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கிகாரத்தைப் பெறுவதற்கு மனித வளத்திற்கான எந்த நடைமுறையும் இல்லை. | கம்பனியின் செயல்பாடுகளை முகாமைப்பதில் சம்மந்தப்பட்ட அதிகார பீடங்களால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்களை கம்பனி கடைப்பிடிக்க வேண்டும். மற்றும் கம்பனியின் நடைமுறை நிதி அமைச்சின் வழிகாட்டுதலின் படி மாற்றப்படும். |
| | (ii.) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பூச்சிய வட்டி விகிதத்தில் கம்பனியின் 22 | கார் கொள்கையானது ஷெல் காஸ் லங்கா லிமிட்டடினால் | நியமிக்கப்பட்டுள்ள துணைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் |

| | | |
|---|---|---|
| அதிகாரிகளுக்கு ரூபா.127.06 மில்லியன் ஊழியர் வாகனக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. கடனில் 50% மான ரூபா. 63.53 மில்லியன் கம்பனியால் சுமக்கப்படுகிறது. | அறிமுகப்படுத்தப்பட்டது. மற்றும் பிறகு பல திருத்தங்கள் கம்பனியால் செய்யப்பட்டது. அமைப்பு அகவிதியின் கீழ் தலைவர் ஒரு துணைக்குழுவை நியமித்திருக்கிறார். தற்போதுள்ள கார் கொள்கையை மேம்படுத்தல் செய்வதற்கு அவர்கள் பரிந்துரைந்துள்ளனர். | கொள்ள முடியாது. ஏனெனில் கருத்து வேறுமை அவதானிக்கப்பட்டிருந்தது. எனவே, கடன்தொகையை முழுமையாக வசூலிக்கவும் மற்றும் மற்ற அரச கம்பனிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டது போன்று நியாயமான வட்டியை வசூலிக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் பொதுத் திறைசேரியிடமிருந்து அறிவுறுத்தல்களை நாட முடியும். |
| (iii.) 2020 செப்டம்பர் மாதத்தில் பூச்சிய வட்டி விகிதத்தில் கம்பனியின் 33 அதிகாரிகளுக்கு ரூபா.251 மில்லியன் வேலை தொடர்பான வாகனக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. | அதே கார் கடன் கொள்கைக்கேற்ப வேலை தொடர்பான வாகனக் கடன்களும் வழங்கப்பட்டன. இது ஷெல் காலத்தில் கூட அனுபவித்த ஒரு நன்மையாகும். | கடன்தொகையை முழுமையாக வசூலிக்கவும் மற்றும் மற்ற அரச கம்பனிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டது போன்று நியாயமான வட்டியை வசூலிக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் பொதுத் திறைசேரியிடமிருந்து அறிவுறுத்தல்களை நாட முடியும். |
| (iv.) JG 1-5 குழுவின் 27 அதிகாரிகளுக்கான மாதாந்த வாகனப் படி ஆகஸ்ட் 2020 முதல் 30% அதிகரிக்கப்பட்டிருந்தது. புதிய மாதாந்த வாகனப் படி ரூபா.143,000 முதல் ரூபா.443,300 இற்கு இடைப்பட்ட வரம்பிற்குள் உள்ளது. | குழுவின் பரிந்துரைக்கேற்ப படிகள் செலுத்தப்பட்டது மற்றும் லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட்டின் கார் கொள்கையானது கம்பனியின் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. | துணைக் குழுவின் உறுப்பினர்களும் இத்திட்டத்தின் பயனாளிகளாக இருந்தனர். எனவே, அந்தந்த அதிகார பீடங்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்க பரிந்துரைக்கப்படுகிறது மற்றும் ஏதேனும் அத்தியாவசிய விலகல்கள் தேவைப்பட்டால் பொதுத் திறைசேரியிடமிருந்து முன் அங்கிகாரத்தை நாட முடியும். |
| (v.) JG 6-9 குழுவின் வேலை தொடர்பான வாகனக் கடன்களுக்குத் தகுதியுள்ள | குழுவின் பரிந்துரைக்கேற்ப படிகள் செலுத்தப்பட்டது மற்றும் லிற்றோ காஸ் | பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை |

| | | | |
|---|---|---|---|
| | 33 அதிகாரிகளுக்கு மாதாந்த வாகனப் படி செப்டம்பர் 2020 நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டிருக்கிறது. மாதாந்த வாகனப் படி ரூபா.100,000 முதல் ரூபா.140,300 இற்கு இடைப்பட்ட வரம்பிற்குள் உள்ளது. | லங்கா லிமிட்டட்டின் கார் கொள்கையானது கம்பனியின் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. | கம்பனி பின்பற்ற வேண்டும். துணைக் குழுவின் உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழுளுள்ள பயனாளிகளாக இருந்தனர் அவர்களிடையில் கருத்து வேற்றுமை அவதானிக்கப்பட்டதால், துணைக் குழுவினால் மேற்க்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை ஏற்க முடியாது. |
| (vi.) | JG 6-9 குழுவின் வேலை தொடர்பான வாகனக் கடன்களுக்குத் தகுதியற்ற அதிகாரிகளுக்கான மாதாந்த வாகனப் படி ஆகஸ்ட் 2020 நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. புதிய மாதாந்த வாகனப் படி ரூபா.15,000 முதல் ரூபா.50,000 இற்கு இடைப்பட்ட வரம்பிற்குள் உள்ளது. | குழுவின் பரிந்துரைக்கேற்ப படிகள் செலுத்தப்பட்டது மற்றும் லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட்டின் கார் கொள்கையானது கம்பனியின் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. | கம்பனியானது பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும். ஏதேனும் விலகல்கள் அத்தியாவசியமானால், பொதுத் திறைசேரியிடமிருந்து அறிவுறுத்தல்கள் மற்றும் முன் அங்கிகாரம் பெறப்படும். |
| (vii.) | கம்பனியின் ஒவ்வொரு தனிநபருக்கும் 2020 டிசம்பர் 31 இல் வரையப்பட்ட சம்பளத்தின் மீது 5%-40% சந்தை சரிசெய்தலின் அடிப்படையில் சம்பளத் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. புதிய மாதாந்த சம்பளம் ரூபா.32,972 முதல் ரூபா. 1,610,000 இற்கு இடைப்பட்ட வரம்பிற்குள் உள்ளது. | ஒரு நடைமுறையாக கம்பனியின் ஊதியப் நன்மைகள் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் இயக்குனர்கள் சபை போன்றவற்றால் தீர்மானிக்கப்படுகிறது. PWC ஆல் செய்யப்பட்ட இழப்பீடு மற்றும் நன்மைகள் ஆய்வை செயல்படுத்துவதற்கான ஒரு சபை அங்கிகாரம் வழங்கப்பட்டது மற்றும் அனைத்து ஊழியர்களின் சம்பளமும் ஊதியக் குழு பரிந்துரைகளின்படி செயல்படுத்தப்பட்டது. மற்றும் பணிநிலை விபரக் கட்டமைப்பு மற்றும் சம்பள கட்டமைப்பு பற்றிய அனைத்து விவரங்களும் | சம்பந்தப்பட்ட அதிகார பீடங்களால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் மாற்றங்களுக்கு ஏற்ப கம்பனியின் நடைமுறை சீராக்கம் செய்யப்படும். ஏதேனும் விலகல்கள் தேவைப்படுமானால் பொதுத் திறைசேரியிடமிருந்து அறிவுறுத்தல்கள் மற்றும் முன் அங்கிகாரத்தை நாட முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடங்கிய கடிதம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. | |
| | (viii.) தலைவர் மற்றும் விற்பனை இயக்குனருக்கு முறையே ரூ.150,000 மற்றும் ரூ.100,000 பொழுதுபோக்கு படி செலுத்தப்படுகிறது. | நிர்வாக இயக்குனர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு மாதாந்த கட்டணம் செலுத்துவது கம்பனியின் ஒரு தொடர்ச்சியான நடைமுறையாகும்.<br>பொழுதுபோக்கு படி உட்பட தலைமை நிறைவேற்று அதிகாரியின் ஊதியத்திற்கு சபை அங்கிகாரம் வழங்கப்பட்டது மற்றும் கம்பனியானது உரிய அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு முறையாகத் தெரிவித்தது. | கம்பனியின் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரியின் இரு முரண்பட்ட வகிபாகங்கள் ஒரு தனிநபரால் நடத்தப்பட்டதால், அவரது சொந்த நன்மைகளைத் தீர்மானிப்பதில் ஒரு கருத்து வேற்றுமை ஏற்பட்டது.<br>எனவே, கம்பனி பொதுத் திறைசேரியின் முன் அங்கிகாரத்தைப் பெற வேண்டும். |
| (b.) 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை எண். பிஈடி 01/2015 மற்றும் 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை எண். பிஈடி 1/2015(i) | சுற்றறிக்கைகளின் படி, தலைமை நிதி அலுவலர்/தலைமைச் செயல்பாட்டு அலுவலர் மற்றும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஏதேனும் SOE இன் HM 1-1 வகைக்கு சமமாக அல்லது அதற்கு மேல் உள்ள பதவி வகிக்கும் நபர் ஒரே ஒரு அதிகாரப்பூர்வ வாகனத்தைப் பயன்படுத்த மற்றும் மாதாந்தம் முறையே 140 மற்றும் 120 லிட்டருக்கு சமமான எரிபொருள் படிக்கு உரித்துடையவராவார் மற்றும் மேலுள்ள அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படலாம் அல்லது மாதாந்திர கொடுப்பனவாக ரூ.50,000 மற்றும் மாதாந்திர எரிபொருள் கொடுப்பனவு வரையப்படலாம்.<br>சுற்றறிக்கைக்கு முரணாக;<br>(i.) உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரிமையற்ற | சுற்றறிக்கையின் படி, இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் லிட்ரோ கேஸ் லிமிட்டட் துணை நிறுவனத்தின் கீழ் வருவதால் அதற்குப் பொருந்தாது.<br>தலைவர், தலைமை நிறைவேற்று அதிகாரி, இயக்குனர்கள் சபை ஆகியோருக்கான படிக் கொடுப்பனவுகள் போட்டி சந்தை விகிதங்களைக் கருத்தில் கொண்டு அந்தந்த சபையால் தீர்மானிக்கப்படும். அதன்படி, PED 01/2015க்குப் பதிலாக கம்பனியின் அமைப்பு அகவிதியின் அடிப்படையில், பொது முயற்சிகள் திணைக்களத்தின் பிரதிநிதியை உள்ளடக்கிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கார் கொள்கையைப் பின்பற்றியது. | கருத்து வேற்றுமை அவதானிக்கப்பட்டதால் துணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை கடைபிடிக்க பரிந்துரைக்கப்படுகிறது மற்றும் ஏதேனும் விலகல்கள் அவசியமானால் பொதுத் திறைசேரியின் அறிவுறுத்தல்கள் மற்றும் முன் அங்கிகாரம் நாடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் அல்லது மாதாந்திர கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன.<br>(ii.) மாதாந்த வாகன கொடுப்பனவு ரூபா. 100,000 முதல் ரூ. 371,800 வரையில் உள்ளது. இது 59 அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த கொடுப்பனவான ரூ.50,000 ஐ விட அதிகமாகும்.<br>(iii.) மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 200 லீற்றர் முதல் 550 லீற்றர் வரையில் உள்ளது. இது 59 அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட மாதாந்த எரிபொருள் கொடுப்பனவான 140 அல்லது 120 லீற்றர் ஐ விட அதிகமாகும். | | |
| (c.) 2020 ஜனவரி 27 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை எண். பிஈடி 01/2020. | (i.) சுற்றறிக்கையின் படி, எந்தவொரு அரசுக்குச் சொந்தமான நிறுவனத்தினதும் தலைவர்/முகாமைத்துவ இயக்குனர்/நிறைவேற்று இயக்குனர்/தலைமை நிறைவேற்று அதிகாரி/பணிப்பாளர் நாயகம் ஆகியோர் ஒரு உத்தியோகபூர்வ வாகனத்தையும் மாதத்திற்கு 150 லிட்டருக்கு சமமான எரிபொருள் கொடுப்பனவையும் மட்டுமே பயன்படுத்துவதற்கு உரிமையுடையவர்கள் மற்றும் மேற்குறித்த அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படலாம் அல்லது மாதாந்த கொடுப்பனவாக ரூ.50,000 மற்றும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு வரையப்படலாம். இருப்பினும், அத்தகைய அதிகாரிகளுக்கு ஓட்டுநர் அல்லது ஓட்டுநர் கொடுப்பனவு வழங்கப்பட | 21 பெப்ரவரி 2020 மற்றும் 31 யூலை 2020 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் அமைப்பு அகவிதி மற்றும் அமைப்பு புறவிதி இன் உருப்படி எண் 76,77,78,83 இன் படி, தலைவர், நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத இயக்குனர்கள் மற்றும் அவதானிப்பாளர்களுக்குரிய படிக் கொடுப்பனவுகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல் போன்றவை இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | கம்பனியின் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி ஆகிய இரு முரண்பட்ட பாத்திரங்கள் ஒரு தனிநபரால் நடத்தப்படும். ஆகவே, அவர்களது சொந்த நன்மைகளைத் தீர்மானிப்பதில் ஒரு கருத்து வேற்றுமை ஏற்பட்டது. எனவே, பொதுத் திறைசேரியின் முன் அங்கிகாரம் அவசியமாகும். |

மாட்டாது. சுற்றறிக்கைக்கு முரணாக;

- மாதாந்த வாகன கொடுப்பனவு ரூ. ரூ.50,000 ஐ விடக் கூடுதலான மாதாந்த கொடுப்பனவு ரூபா.443,000 தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு செலுத்தப்படுகிறது
- மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 150 லிட்டர் ஐ விடக் கூடுதலான மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 500 லிட்டர் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு வழங்கப்பட்டது.
- மாதாந்த ஓட்டுனர் கொடுப்பனவு ரூபா.50,000 தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு செலுத்தப்படுகிறது.

(ii.) சுற்றறிக்கையின்படி, நிறைவேற்று அல்லாத இயக்குனருக்கான (NED) மொத்த அமர்வுக்கான கொடுப்பனவானது மாதாந்தம் ரூ.25,000 க்கு கூடாமல் இருக்க வேண்டும். மற்றும் அவர் அமர்வுக்கான கொடுப்பனவிற்கு மட்டுமே உரித்துடையவராவார். சுற்றறிக்கைக்கு முரணாக;

- சபைக் கூட்டத்திற்கு ரூ.25,000 வீதம் அமர்வுக் கொடுப்பனவு மூன்று நிறைவேற்று அல்லாத இயக்குனர்களுக்கு (NED) கொடுப்பனவு செய்யப்பட்டது.

- மாதாந்த வாகனக் கொடுப்பனவு ரூ.100,000

| | | | |
|---|---|---|---|
| | மூன்று நிறைவேற்று அல்லாத இயக்குனர்களுக்கு (NED) கொடுப்பனவு செய்யப்பட்டது. | | |
| (d.) 2018 யூலை 18 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை எண். பிஈடி 03/2018. | சுற்றறிக்கையின் வழிகாட்டியின் படி ஒரு ஊழியருக்கான வெகுமதி தொகையான ரூ.13,500 க்கு முரணாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கம்பனியின் ஒரு ஊழியருக்கு (கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தத்தின் கீழ் உள்ள ஊழியர்களைத் தவிர) ரூ.60,000 வெகுமதி செலுத்தப்பட்டது. | CBA அல்லாத ஊழியர்களின் வருடாந்த செயல்திறன் அடிப்படையிலான வெகுமதி தனிப்பட்ட செயல்திறன் மற்றும் கம்பனியின் செயல்திறன் ஆகியவற்றின் தொடர்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. வெகுமதி செலுத்தும் மாதங்களின் எண்ணிக்கையானது, CBA ஊழியரின் கொடுப்பனவு மற்றும் எங்கள் தாய் நிறுவனம் செலுத்திய மாதங்களின் எண்ணிக்கை ஆகியவற்றுடன் இணங்க வேண்டும். (எஸ்.எல்.ஐ.சி) வெகுமதி திட்டங்களானது சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஊதியக் குழுவால் பரிந்துரைக்கப்படும். | கம்பனியானது சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டும் மற்றும் ஏதேனும் விலகல்கள் தேவைப்பட்டால், பொதுத் திறைசேரியின் அங்கிகாரம் அவசியமாகும். |
| (e.) 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை எண். PED/12 இன் பிரிவு 8.3.3(C) . | பொது திறைசேரியின் அங்கிகாரத்தைப் பெறாமல் கம்பனியின் வெகுமதி திட்டத்தின் கீழ் கம்பனியின் ஊழியர்களுக்கு (கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தத்தின் கீழ் உள்ள ஊழியர்களைத் தவிர) மீளாய்விற்குரிய ஆண்டில் ரூ.43.91 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 200 க்கும் மேற்பட்ட மனிதவளத் தொழிலாளர்களால் கையாளப்படும் நிரப்புதல் செயல்பாடு, சிலிண்டர் பராமரிப்பு செயல்பாடுகள் மற்றும் போக்குவரத்து போன்ற பல சேவைகள் உள்ளன, மற்றும் ஊதியக் குழு மூலம் பரிந்துரை பெறப்பட்டது அத்துடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான ஊதியக் குழு ஊடாக தற்போதைய ஊதியக் கட்டமைப்பை மதிப்பாய்வு செய்ய சபை அங்கிகாரம் வழங்கப்பட்டது. | கம்பனியானது சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டும் மற்றும் ஏதேனும் விலகல்கள் தேவைப்பட்டால், பொதுத் திறைசேரியின் அங்கிகாரம் அவசியமாகும். |
| (f.) கம்பனியின் தலைவருக்கு 20 ஏப்ரல் 2021 | தற்போதுள்ள 12.5Kg சிலிண்டர்களை விட எடை குறைவாக இருந்த 18 | 20 ஏப்ரல் 2021 திகதியிட்ட கடிதமானது புதிய கலப்பு (hybrid) சிலிண்டரை | சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டாளர்கள் வழங்கிய |

| | | | |
|---|---|---|---|
| திகதியிட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் கடிதம் | லிட்டர்கள் தோராயமாக 9.7Kg LPG க்கு சமமாக இருந்ததால், தற்போதுள்ள 12.5Kg வீட்டு சிலிண்டரில் 9.7Kg LP எரிவாயு நிரப்புவதன் மூலம் கம்பனி நுகர்வோரை தவறாக வழிநடத்தியதன் காரணமாக, CAA ஆனது 18 லிட்டர் பிரீமியம் கலப்பு (hybrid) LP எரிவாயு சிலிண்டரை மறு அறிவிப்பு வரும் வரை உடனடியாக சந்தையில் இருந்து திரும்பப் பெறுமாறு கம்பனிக்கு உத்தரவிட்டது. இருப்பினும், யூலை 2021 வரை 18 லிட்டர் பிரீமியம் கலப்பு (hybrid) LP எரிவாயு சிலிண்டர் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. | அறிமுகப்படுத்திய 9/4/2021 திகதியிட்ட லிட்ரோவின் கடிதத்திற்கு CAA பதிலளித்த ஆரம்பக் கடிதமாகும்.<br><br>இருப்பினும், 20 ஏப்ரல் 2021 திகதியிட்ட அந்த கடிதத்திற்குப் பிறகு, CAA லிட்ரோவிடம் 12.5Kg போதுமான கையிருப்பை வைத்திருக்குமாறு மட்டுமே கோரியிருந்தது, ஆனால் 18 லிட்டர் சிலிண்டரை சந்தையில் இருந்து திரும்பப் பெறக் கோரவில்லை என்பதை உறுதிப்படுத்த பல ஆவணங்கள் உள்ளன. | அறிவுறுத்தல்களை கம்பனி சரியாகக் கையாள வேண்டும். |
| (g.) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 18(1) | பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் (CAA) முன் அங்கிகாரமின்றி கம்பனி 18 லிட்டர் பிரீமியம் கலப்பு (hybrid) சிலிண்டரின் விலையை ரூ.236 அல்லது 20% ஆல் அதிகரித்துள்ளது.<br>அதன்படி, CAA இன் அனுமதியின்றி விற்கப்பட்ட 18 லிட்டர் பிரீமியம் கலப்பு (hybrid) சிலிண்டர்களின் மொத்த எண்ணிக்கையின் மொத்த அதிகரித்த விலை ரூ.1.22 பில்லியனாக இருந்தது அவதானிக்கப்பட்டது. | 2.5kg, 5kg மற்றும் 12.5 சிலிண்டர்களுக்கு மட்டுமே விலைக் கட்டுப்பாடு அல்லது CAA இன் ஒப்புதல் தேவைப்படுகிறது. CAA இன் விலைக் கட்டுப்பாட்டை முறியடிக்கும் ஒரு வணிக மாதிரியாகவும் புதிய தயாரிப்பாகவும் 18 லிட்டர் சிலிண்டர் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது, இது ஒரு கொள்கையாகவும், பொது முயற்சிகள் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் இயக்குனரின் ஒப்புதலுடன் கூட ஒரு மூலோபாய நடவடிக்கையாகவும் கம்பனி CAA க்கு அறிவித்துள்ளது. | விலை நிர்ணயம் செய்யப்பட்ட பொருளாக சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டாளர்கள் வழங்கிய அறிவுறுத்தல்களை கம்பனி சரியாகக் கையாள வேண்டும். |
| (h.) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை மற்றும் 2018 | ஏற்பாடுகளின் படி, கம்பனி உட்பட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை கணக்காய்வு செய்ய கணக்காய்வாளர் தலைமையதி கணக்காய்வாளராக இருக்க வேண்டும். அரசியலமைப்பு விதிகளுக்கு முரணாக 2020 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் | அரசியலமைப்பு, குறிப்பாக 154வது உறுப்புரை, கணக்காய்வுப் பணிகளுக்காக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் வரம்பிற்குள் வரும் நிறுவனங்களை தெளிவாகக் குறிப்பிடுகிறது. | கம்பனியின் வணிகத்தைத் தொடரும் போது நாட்டின் சட்டத்தை பின்பற்றுவதையும் ஒருமைப்பாட்டைப் பேணுவதையும் சபை உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம். | கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பொது நடைமுறையில் உள்ள ஒரு கணக்காய்வு கம்பனி நியமிக்கப்பட்டிருந்தது மற்றும் அவர்கள் 2020 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வினை மேற்கொண்டனர். | அரசியலமைப்பின் சமீபத்திய 20 வது திருத்தத்தில் 154 வது உறுப்புரை குறிப்பாக அதன் சிங்கள உரை திருத்தப்பட்டது, இதன் மூலம் நிலவிய தெளிவின்மை நீக்கப்பட்டது. எவ்வாறாயினும், LGLL & LGTLL ஆகியவை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கீழ் வருகிறதா என்பதைக் உறுதிப்படுத்துவது சட்டத்தின் கேள்வியாகும், இது ஒரு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும், ஆனால் கம்பனி அல்லது தலைமை சட்ட அதிகாரியால் அல்ல. மேற்கூறிய நடவடிக்கைகள் குறித்த அறிவிப்புகளை வெளியிட்டு மற்றும் இரு கம்பனிகளின் விவகாரங்களையும் கணக்காய்வு செய்வதிலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியை தடுக்கும் இடைக்கால உத்தரவுகளை வழங்கியதன் மூலம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் மேற்படி நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.7,377,691,708 நட்டமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா.83, 947,583 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா.7,461,639,291 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. உற்பத்தியின் விலையை ஈடுகட்ட விலையின் சரிசெய்யாமை காரணமாக தேறிய மொத்த நட்டம் ரூ. 7,244,616,838 உழைக்கப்பட்டது இதுவே வீழ்ச்சிக்கான காரணமாகும்.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

முந்தைய இரண்டு (02) ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவீன உருப்படிகளின் சதவீதத்துடனான அதிகரிப்பு அல்லது குறைவின் பகுப்பாய்வு பின்வருமாறு.

| **31 டிசம்பர் இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **தொகை (ரூபா, 000)** | | | **விகிதாசார மாற்றம்** | | |
|---|---|---|---|---|---|---|
| | **2021** | **2020** | **2019** | **2021** | **2020** | **2019** |
| வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்திலிருந்தான வருமானம் | 52,308,942 | 39,714,783 | 43,730,228 | 32% | -9% | 12% |
| விற்பனைக்கிரயம் | 59,553,559 | 37,392,413 | 36,489,126 | 59% | 2% | 0.24% |
| (நட்டம்) /செயற்பாட்டிலிருந்தான இலாபம் | (9,871,304) | (303,493) | 4,083,343 | -3153% | -107% | 1138% |
| நிதி வருமானம் | 276,479 | 678,964 | 878,588 | -59% | -23% | 34% |
| நிதிச் செலவுகள் | 575,350 | 291,358 | 34,669 | 97% | 740% | -93% |

## 2.3 விகித பகுப்பாய்வு

முந்தைய மூன்று (03) ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது முக்கிய விகிதங்கள் பின்வருமாறு.

| **விகிதம்** | **2018** | **2019** | **2020** | **2021** |
|---|---|---|---|---|
| தேறிய இலாப விகிதம | 0.95% | 11.35% | 2.53% | -18.34% |
| மூலதனத்தின் மீதான வருவாய் (ROCE) | 1.37% | 18.59% | 4.45% | -42.03% |
| உரிமை மீதான திரும்பல் விகிதம் | 0.52% | 22.13% | 2.23% | -73.20% |
| சொத்து புரள்வு விகிதம் | 220.36% | 271.67% | 233.32% | 260.31% |
| சொத்து மீதான திரும்பல் விகிதம் | 1.21% | 16.52% | 4.02% | -31.64% |
| நடைமுறை விகிதம் | 3.51 | 4.16 | 3.25 | 1.36 |
| விரைவு விகிதம் | 2.89 | 3.66 | 2.87 | 1.03 |
| நிதி அந்நியச் செலாவணி | 1.95 | 1.89 | 1.81 | 3.01 |
| கடன் சொத்து விகிதம் | 0.49 | 0.47 | 0.48 | 0.67 |
| கடன் உரிமை விகிதம் | 0.95 | 0.89 | 0.87 | 2.01 |
| நடைமுறை மொத்த பொறுப்பு விகிதம் | 0.25 | 0.24 | 0.20 | 0.37 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (a) சட்டக் கட்டணம் - 2020 இற்கான கம்பனியின் கணக்காய்விலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதில் அமர்த்தல்<br><br>(i.) 2020 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்விலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதில் அமர்த்துதல் தொடர்பான உத்தேச மேன்முறையீட்டு நீதிமன்ற ரிட் விண்ணப்பத்திற்காக தொழில்முறை சேவைகள் பெறப்பட்டிருந்தன. அதன்படி, 05 பெப்ரவரி 2021 அன்று சட்ட ஆலோசகர்களுக்கு கம்பனியால் ரூ.2.6 மில்லியன் செலுத்தப்பட்டது. | LGLL இன் துணை அதிகாரங்களின் 4 வது உறுப்புரை மற்றும் LGTLL உறுப்புரைகளின் 19 வது உறுப்புரையின் படி, இலங்கையிலோ அல்லது வேறு இடங்களிலோ முகவர்களை நியமிக்க அல்லது வேலையில் ஈடுபடுத்த, பராமரிக்க பொருத்தமானதாக கருதப்படும் எந்தவொரு விகிதத்திலும் முறையிலும் ஊதியம் வழங்குவதற்கும் பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி, கௌரவ தலைமைச் சட்ட அதிகாரி தனியார் கம்பனிகளுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்காத காரணத்தினால், இயக்குனர் சபை மேற்படி ஜனாதிபதி ஆலோசகரின் சேவையை நாடியுள்ளது<br><br>பங்குதாரர்களின் நலன் மற்றும் உரிமையைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையாக, கம்பனி சட்டத்தின் விதிகளின் பார்வையில், தங்களுக்கு விருப்பமான கணக்காய்வாளரை நியமிப்பதற்கு, PWC இன் நியமனத்திற்கு கணக்காய்வாளர் தலைமையதி ஆட்சேபனை தெரிவிக்கும் பட்சத்தில், கம்பனி தகுந்த ஆலோசகரின் சேவையை நாடியது.<br><br>எனவே, அதே சட்ட ஆலோசகருக்கும் அவரது கனிஷ்டர்களுக்கும் கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும், ஆலோசனைகள் செய்வதற்கும், மூலோபாய மற்றும் சட்ட ஆலோசனைக்கான ஆவணங்களைப் பார்ப்பதற்கும், மனு மற்றும் பிரமாணப் பத்திரத்தை வரைவதற்கும், தீர்ப்பதற்கும் அந்தத் தொகை செலுத்தப்பட்டிருக்கிறது. | கம்பனியின் விவகாரங்களை மேற்கொள்ளும் போது, நாட்டின் சட்டம், பிடித்து வைத்திருக்கும் கம்பனி மற்றும் திறைசேரி செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதல்கள் என்பவற்றை சபை கடைபிடிக்க வேண்டும். சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கு ஏதேனும் தேவை இருப்பின், இலங்கையின் தேசிய பெறுகை முகவரால் ஆகஸ்ட் 2007 வெளியிடப்பட்ட ஆலோசகர்களின் வழிகாட்டுதல்கள் தேர்வு மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை கம்பனி பின்பற்ற வேண்டும். |
| (ii.) கணக்காய்வாளர் தலைமையதிபதி கணக்காய்வை மேற்கொள்வதற்கு எவ்வித சட்டத் | கம்பனியின் விவகாரங்களை கணக்காய்வு செய்வதற்காக கணக்காய்வாளர் தலைமையதிபதியை நியமிப்பது கம்பனியின் பங்குதாரர்கள் ஒரு AGM இல் முடிவு செய்ய வேண்டிய விஷயம் என்பது | |

| | | |
|---|---|---|
| | தடையும் இல்லை என தலைமை சட்டமா அதிகாரி கூட தனது கருத்தை தெரிவித்திருந்தது போன்று கம்பனிகளின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமையதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் தனது அதிகாரிகளால் மேற்க்கொள்ளப்படும் என்று 07 ஜனவரி 2021 அன்று கணக்காய்வாளர் தலைமையதிபதி கம்பனியிற்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதனைத் தொடர்ந்து, ரூபா.1.5 மில்லியன் பெறுமதியை செலவு செய்து மேற்படி கடிதத்தின் மீதான சட்டரீதியான கருத்தை கம்பனி பெற்றிருந்தது. | உங்களுக்குத் தெரியும், மேலும் LGLL & LGTLL க்கான வெளியகக் கணக்காய்வாளரை நியமிப்பதற்கான ஆட்சேபனையும் AGM இல் அல்லது AGM க்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>எவ்வாறாயினும், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் மேற்படி கடிதம் AGM முடிந்து ஒரு மாதத்திற்குப் பின்னரே கிடைத்ததால், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அனுப்பப்பட்ட அதே கடிதம் தொடர்பாக திரு.சஞ்சீவ ஜயவர்தன PC யிடம் எழுத்துப்பூர்வ சட்டக் கருத்தைக் கோருவதற்கு பணிப்பாளர் சபை நிர்ப்பந்திக்கப்பட்டது.<br>திரு. சஞ்சீவ ஜயவர்தன PC யின் கருத்துக்கான கொடுப்பனவுகளை அதே சபை பத்திரம் அங்கீகரிக்கிறது. அதன்படி, LGLL இன் துணை அதிகாரங்கள் உறுப்புரை 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் படி திரு. சஞ்சீவ ஜெயவர்தன PC க்கு மேற்படி கட்டணத்தை செலுத்த கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது. |
| (iii.) | சட்ட ஆலோசனைகளைப் பெற்ற பிறகு, கம்பனி 22 மே 2021 அன்று கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அரசியலமைப்பு அதிகார வரம்பிற்குள் வரும் கம்பனியின் முடிவை சவால் செய்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தது. எவ்வாறாயினும், 30 யூலை 2021 | 20 யூலை 2021 திகதியிட்ட கடிதத்தின் மூலம் முக்கிய பங்குதாரர், LGLL இன் இயக்குனர் சபைக்கு அறிவுறுத்தியுள்ளார். இயக்குனர் சபை 22/7/2021 அன்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில், கம்பனியின் நிதியை ஆய்வு செய்ய கணக்காய்வாளர் தலைமையதிபதியை நியமிக்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்தனர். LGLL க்கு கணக்காய்வாளர் தலைமையதிபதியை நியமிப்பது தொடர்பாக 20/7/2021 திகதியிட்ட கடிதத்தின் மூலம் முக்கிய பங்குதாரரான LGLL ஒரே பங்குதாரரால் 23 ஏப்ரல் 2021 அன்று சமர்ப்பிக்கப்பட்ட பினாமிகள் திரும்பப் பெறப்பட்டதைக் கருத்தில் கொண்டு மட்டுமே, மேல்முறையீட்டு நீதிமன்ற ரிட் விண்ணப்ப எண்கள்: CA |

| | | |
|---|---|---|
| | திகதியிட்ட சபை முடிவின் அடிப்படையில் இந்த வழக்கு கம்பனியால் மீளப் பெறப்பட்டது. மேற்படி வழக்கு தொடர்பான சட்டக் கட்டணம் ரூ.8.1 மில்லியன் யூன் 2021 இல் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. | Writ 286/2021 & CA Writ 287/2021 ஐத் திரும்பப் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது, இதில் நீதிமன்றம் 21 செப்டம்பர் 2021 ஆம் தேதி வரை LGLL கம்பனியை கணக்காய்வு செய்வதைத் தடுக்கும் நிவாரணத்துடன் பதிலளித்தவர்கள் மீது முறையான அறிவிப்பை வெளியிட்டது. எனவே, மேற்கூறிய இடைக்கால உத்தரவை நீதிமன்றத்தால் ரத்து செய்த பின்னரே அல்லது இந்த வழக்குகளை மீளப் பெற்ற பின்னரே கணக்காய்வாளர் தலைமையதிபதி தனது உத்தியோகபூர்வ பணிகளைச் செய்யத் தொடங்க முடியும். மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி நடவடிக்கைகள் குறித்த அறிவிப்புகளை வெளியிட்டது மற்றும் கம்பனியின் விவகாரங்களை கணக்காய்வு செய்வதிலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியை தடுக்கும் இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. |
| (iv.) | மேற்படி விடயம் தொடர்பாக ஏற்பட்ட மொத்த செலவுகள் ரூ.12.2 மில்லியன் சிக்கனமற்ற செலவீனமாக அவதானிக்கப்பட்டது. | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரபல சட்டத்தரணிகளான ஜனாதிபதி சட்டத்தரணிளால் கம்பனி பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது இந்த விடயம் தொடர்பில் அவர்கள் தமது தனித்துவ கருத்தை வெளிப்படுத்தியிருந்தனர். சட்டத்தரணி-வாடிக்கையாளர் உறவைப் பேணுகின்ற ஆங்கில சட்ட முறைமையின் மரபுகள் மணல் நடைமுறைகளால் இலங்கையின் சட்ட முறைமை வளப்படுத்தப்பட்டுள்ளது.<br>கொடுப்பனவுகளைச் செலுத்துதல் மற்றும் பிற தொடர்புடைய விடயங்களின் இந்த பகுதியில் கட்டமைப்பு அல்லது பொருந்தக்கூடிய விதி எதுவும் இல்லை. அதன்படி, நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பவரின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சிறந்த மற்றும் திறமையான ஆலோசகருக்கு கட்டணம் செலுத்தும் போது வாடிக்கையாளருக்கு பேரம் பேசும் சக்தி இல்லை. கூறப்பட்ட தொகையானது பொருளாதாரமற்ற செலவினமா என்பதை உறுதி செய்வதற்காக, அதே அல்லது ஒத்த ஆலோசகர்களின் சட்டக் கட்டணங்கள் குறித்த சந்தை ஆய்வை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| (b.) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வாடகைக் கட்டணம் வசூலிக்காமல் 7 மொத்த வாடிக்கையாளர்களுக்கு தொட்டிகள்/சொத்துக்கள் வழங்கப்பட்டிருந்தன, அதே நேரத்தில் மாதாந்த வாடகைக் கட்டணத்தின் கீழ் மற்றொரு மொத்த வாடிக்கையாளருக்கு இரண்டு தொட்டிகள் வழங்கப்பட்டன. மேலும், இலவசமாக வழங்கப்படும் தொட்டிகள்/சொத்துகளின் உரிமையானது 10 வருட காலத்திற்கு கம்பனியிடம் இருக்கும், மற்றும் 10 வருட காலத்திற்குப் பிறகு, தொட்டிகள்/சொத்துக்கள் வாடிக்கையாளருக்கு தானாகவே மாற்றப்படும். | வாடிக்கையாளரின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, போட்டியாளரை விட பலன்களை வழங்க பல கருவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், லிற்றோ ஏறத்தாழ 1300MT கூடுதல் அளவைப் பெற்றது, ரேமினல் உற்பத்தி கட்டணம் USD 51 ஆக எடுக்கப்பட்டதால், இது இந்த குழுவிலிருந்து மொத்தமாக 2500MT க்கும் அதிகமாக இருந்தது, ரேமினலுக்கு அதிகரித்த வருமானம் இருந்தது மற்றும் இரண்டு கம்பனிகளின் ஒருங்கிணைந்த வரம்பில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. | மொத்த விற்பனை மற்றும் வாடிக்கையாளர்களை நியாயமான முறையில் நடத்துவதற்கான அங்கீகரிக்கப்பட்ட கொள்கையை கம்பனி கொண்டிருக்க வேண்டும். ஏதேனும் விலகல் இன்றியமையாததாக இருந்தால், அது சரியான அதிகாரத்துடன் செய்யப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் பயன்படுத்தப்பட்ட விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் கொள்கை மற்றும் விலைக் கொள்கை குறிப்பு இயக்குனர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டது அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் கொள்கை உள்ளிட்ட திருத்தப்பட்ட கொள்கைகளுக்கு குழுவின் ஒப்புதலை நாங்கள் சமர்ப்பித்தோம். | வினைத்திறனின்மைகளைத் தவிர்ப்பதற்கும், சாத்தியமான தவறான நடத்தைகளைத் தவிர்ப்பதற்கும், கம்பனியின் விற்பனைச் செயல்பாடுகள் சபை அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் இணங்குவதை கம்பனி உறுதிசெய்ய வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) மொத்த வாடிக்கையாளர்கள் மற்றும் வணிக வாடிக்கையாளர்களிடமிருந்து மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டுக்கான வருமானம் முறையே ரூபா.7.98 பில்லியன் மற்றும் ரூபா.3.77 பில்லியன் ஆகும். பின்வரும் காரணங்களால் மொத்த வாடிக்கையாளர்கள் மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கான விலைக் | வணிகத் துறையானது மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது மற்றும் போட்டியாளர் நன்மைகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளரைப் பேணுவதில் மிகவும் தீவிரமானவர். | பரிவர்த்தனைகளின் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க, மொத்த மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கு கம்பனி வழங்கும் விலை மற்றும் பிற தொடர்புடைய |

| | | |
|---|---|---|
| கொள்கை வெளிப்படையான கொள்கையாக இருந்தது உறுதி செய்யப்படவில்லை. | | சலுகைகளை தீர்மானிப்பதற்கு பொருத்தமான அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்ட தெளிவான கொள்கை மற்றும் செயல்முறை இருக்க வேண்டும். |
| (i.) ஒவ்வொரு வாடிக்கையாளருக்குமான விலையை தீர்மானிக்க இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தி விலைக்கு வெவ்வேறு தள்ளுபடி விகிதங்கள் மற்றும் எல்லைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (ii.) பல சந்தர்ப்பங்களில் அதே வாடிக்கையாளருக்கான விலையை மாதாந்த அடிப்படையில் தீர்மானிக்க வெவ்வேறு தள்ளுபடி விகிதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | போட்டியாளரின் தீவிரமான அணுகுமுறை காரணமாக குறுகிய காலத்தில் அளவு மற்றும் வாடிக்கையாளர்களைப் பாதுகாக்க சிறப்பு தள்ளுபடிகள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (iii.) 26 செப்டம்பர் 2020 முதல் அதிக வாடிக்கையாளர்களுக்கான விலையைத் தீர்மானிக்க இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திச் செலவுக்கு தேறிய தள்ளுபடிகள் (மொத்த இழப்பு) பயன்படுத்தப்பட்டிருந்தன, மற்றும் தேறிய தள்ளுபடிகளுடன் இந்த விலைத் திருத்தத்திற்கு சபையின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. | அளவு மற்றும் சந்தைப் பங்கைப் பெற வெவ்வேறு தள்ளுபடி மற்றும் விலையிடல் விருப்பத் தேர்வு பயன்படுத்தப்பட்டிருந்தது. கோவிட் தொற்றுநோய் காரணமாக தொழில்துறை மற்றும் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக வணிக வாடிக்கையாளர்களுக்கு இந்த காலகட்டத்தில் குறைந்த விலையில் வழங்கப்பட்டது. | |
| (iv.) சில வாடிக்கையாளர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தி விலைக்குக் கீழே LPG வழங்கப்பட்டது. (இது USD 51 இன் உற்பத்திக் கட்டணம் விலக்கப்பட்டது). மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்காக LPG மட்டும் மொத்த வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் (இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தி கிரயத்திற்கு குறைவான விலை USD 51 இன் உற்பத்திக் கட்டணத்தைத் தவிர்த்து) மொத்த நட்டம் ரூ.77 மில்லியன் ஆகும். | தொகுதிகளைப் பெற சிறிய எல்லையுடன் அல்லது எல்லை இல்லாமல் மிகக் குறைந்த விலையை போட்டியாளர் வழங்கியுள்ளார்.<br>GP எல்லை விளைவை ஏற்படுத்தவில்லை என்றாலும் கூட, US$ 51 இல் உற்பத்தி வசூலிக்கப்படுகிறது (சாதாரண உற்பத்தி US$ 20). இந்த US$ 31 தானான ஒரு எல்லை ஆகும். | |
| (v.) தள்ளுபடி அனுமதிக்கப்பட்ட வணிக வாடிக்கையாளர் மாதங்களான 6,695 இல் இருந்து 1,597 இன் வணிக வாடிக்கையாளர் மாதங்களுக்கு | | |

| | | |
|---|---|---|
| | தொடர்புடைய மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான ஒரு Kg க்கு மொத்த இழப்பு வரம்பு (இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தி கிரயத்திற்கு குறைவான விலை USD 51 இன் உற்பத்தி கட்டணத்தைத் தவிர்த்து) ரூபா. 10.64 முதல் ரூபா.45.31 வரை ஆக இருந்தது. | |
| (vi.) | சில சந்தர்ப்பங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட எல்பிஜியின் உண்மையான கொள்வனவு விலைக்குக் கீழே எல்பிஜி இன் மொத்த வழங்கல் விநியோகம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏப்ரல் 2021 முதல் மொத்த கிரயம் மற்றும் விலை தயாரிப்புக்காக இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திக் கிரயம் மட்டுமே பரிசீலிக்கப்படுகிறது. CPC இலிருந்து சீரற்ற விநியோகம் மற்றும் அளவு விநியோகம் கணிசமாக சிறியதாக இருந்ததே அதற்கு முக்கிய காரணமாகும். CPC கொள்வனவு செலவை விட இறக்குமதி செலவு அதிகமாக உள்ளது மற்றும் கிரயத்திற்காக இறக்குமதி செலவை எடுத்துக்கொள்வது எப்போதும் பாதுகாப்பானது. பரிமாற்ற வீதம், PAL மற்றும் சரக்கு செலவு காரணமாக ஒரு Kg இற்கு CPC விலை எப்போதும் ஒரு Kg இறக்குமதி செலவை விட குறைவாக உள்ளது. |
| (vii.) | 2020 ஆம் ஆண்டில் மூன்று வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக உபகரணங்களை வழங்குவதோடு மேலதிகமாக, மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டுக்காக இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தி விலைக்கு தேறிய தள்ளுபடிகள் மேந்தலை செலவை ஈடுசெய்ய எந்த எல்லையும் இல்லாமல் வழங்கப்பட்டது. | வாடிக்கையாளரின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, போட்டியாளரை விட பலன்களை வழங்க பல கருவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், லிற்றோ ஏறத்தாழ 1300MT கூடுதல் அளவைப் பெற்றது, டெர்மினல் உற்பத்தி கட்டணம் USD 15 ஆக எடுக்கப்பட்டதால், இது இந்த குழுவிலிருந்து மொத்தமாக 2500MT க்கும் அதிகமாக இருந்தது, ரேமினலுக்கு அதிகரித்த வருமானம் இருந்தது மற்றும் இரண்டு கம்பனிகளின் ஒருங்கிணைந்த வரம்பில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. |

| | | |
|---|---|---|
| (b.) மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான இறக்குமதிகள் ஊடாக LPG இன் வழங்கல். | | |
| (i.) கம்பனியால் கருதப்படும் LPG இன் அதிகபட்ச நீராவி அழுத்தம் (Vapor Pressure), guage @ 37.8 Deg.C 830 kpa (8.3 bar) ஆகும் மற்றும் SLS 712 இன் படி LPG இன் அதிகபட்ச நீராவி அழுத்தம், gauge @ 37.8 Deg.C , 1430 kpa (14.3 bar) ஆகும். மேலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வெளியேற்ற துறைமுகத்தில் LPG இன் தர அறிக்கைகளை ஆய்வு செய்ததில், ப்ரொப்பேன் சதவிகிதம் உள்ளடக்கிய LPG இன் கலவை 30 சதவிகிதத்திற்கு மேல் இருந்த போது LPG இன் நீராவி அழுத்தம் guage @ 37.8 Deg.C 600 kpa (6 bar) மேல் ஆகும். | லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட் ஆல் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் அனைத்து சீராக்கிகளும் (regulators) இலங்கை தரநிலைகள் நிறுவகம் SLS 712:1998 ஆல் வழங்கிய LPG தரநிலையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச அழுத்த வரம்புக்கு இணங்க உள்ளன. லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட் 6 பார் நுழைவாயில் அழுத்த (bar inlet pressure) மதிப்பீட்டைக் கொண்ட எந்த சீராக்கியையும் (regulators) இறக்குமதி செய்வதோ அல்லது விநியோகிப்பதோ இல்லை. லிட்ரோ காஸ் லங்காவினால் விநியோகிக்கப்படும் சீராக்கிகளின் (regulators) நுழைவு அழுத்த (inlet pressure) மதிப்பீடு எப்போதும் 14 தடைகளாகவே (bar) உள்ளது. 2010 முதல் லிட்ரோ காஸ் லங்காவினால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் LPG ஆனது எப்போதும் 420-830 max. kpa @ 37.8 Deg. C க்கு இடையில் நீராவி அழுத்தத்தைக் (vapor pressure) கொண்டுள்ளது மற்றும் SLS 712:1998 LPG தரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்பு அளவுகோல்களுக்கு ஏற்ப உள்ளது. | LPG சந்தை மற்றும் நுகர்வோரை சேதப்படுத்தும் பல்வேறு மூலங்களில் இருந்து எழும் அபாயங்களை அடையாளம் காண கம்பனியானது நடைமுறையை வைத்திருக்க வேண்டும் மற்றும் நுகர்வோர் மற்றும் தொழில்துறைக்கு எந்தத் தீங்கும் ஏற்படாமல் இருக்க, திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளை அறிந்திருக்க வேண்டும். |
| (ii.) சுமையேற்றும் துறைமுகத்தில் உள்ள அளவு சான்றிதழின் படி, ஒரு கப்பலின் LPG இன் கலவை தேவையான விவரக்குறிப்பை பூர்த்தி செய்யவில்லை என்பது கவனிக்கப்பட்டது. (எடை சதவீதம் மூலம் புரோபேன், 25 சதவீத வரம்பிலிருந்து 40 சதவீதம் வரை மற்றும் பியூட்டேன், 60 சதவீத வரம்பிலிருந்து 75 சதவீதம் வரை). 17 மே 2021 அன்று வெளியேற்றம் செய்யப்பட்ட மேலே குறிப்பிட்ட கப்பலில் உள்ள இரண்டு கோளங்களிலும் LPG இன் கலவை | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தரநியமம் மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள LPG உற்பத்தி விவரக்குறிப்பு நிபந்தனைகளுக்கு ஏற்ப இறக்குமதிகள் இருப்பதை கம்பனி உறுதிசெய்து, விவரக்குறிப்பில் உள்ள உற்பத்திகளை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும். |

முறையே புரொப்பேன், 85.62 சதவீதம் மற்றும் பியூட்டேன், 14.38 சதவீதம் (1,669.404 MT) மற்றும் புரொப்பேன், 8.76 சதவீதம் மற்றும் பியூட்டேன், 91.24 சதவீதம் (12,007.181 சதவீதம்) ஆக இருந்தது.

- 29 ஏப்ரல் 2021 அன்று LGTLL இன் இயக்குனரால் செய்யப்பட்ட கோரிக்கையின் பேரில் மேற்கண்ட இறக்குமதி வழங்கப்பட்டது. LPG இன் விவரக்குறிப்புடன் கணிசமான அளவு வேறுபடும் அத்தகைய LPG கலவைக்கு அமைச்சரவை (LPG இன் பெறுகை நிலைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு மூலம் மேற்கொள்ளப்படுகிறது மற்றும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்கிறது.) மற்றும் இயக்குனர்கள் குழுவின் எந்த ஒப்புதலும் பெறப்பட்டிருக்கவில்லை. லிட்ரோ காஸ் ரேமினல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (LGTLL) இன் பணிப்பாளரால் வழங்கப்பட்ட எழுத்துமூல அறிக்கையின் படி, கம்பனியின் தலைவர் மற்றும் இயக்கப் பணிப்பாளரின் வாய்மொழி அறிவுறுத்தலின் பேரில் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- மேற்படி கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட LPG கெரவலப்பிட்டியவில் 4 கோளங்களுக்கு நிரப்பப்பட்டு, 17 மே 2021 அன்று கோளங்களில் உள்ள மீதமுள்ள LPG உடன் கலக்கப்பட்டது. LPG கலந்த பிறகு, கோளம் A மற்றும் D ஆகியவற்றில் உள்ள LPG இன் தரமானது முறையே 2021 மே 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் சுயாதீன ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டது. இருப்பினும், கோளம் D இல் உள்ள LPG இன் கலவை தேவையான விவரக்குறிப்பிற்குள் இருக்கவில்லை (புரோபேன், 14.17 சதவீதம் மற்றும் பியூட்டேன், 84.91 சதவீதம்).

- கோளம் B மற்றும் C இல் உள்ள LPG இன் தரமானது சுயாதீன ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. கோளம் B இல் உள்ள LPG ஐ ஆய்வு செய்யாமல், கோளம் B இல் உள்ள 1743.432 MT அளவிலான மொத்த LPG ஆனது 2021 மே 17, 18 மற்றும் 19 திகதிகளில் பவுசர்கள் மற்றும் நிரப்பு ஆலைகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர், 19 மே 2021 அன்று இறக்குமதி செய்யப்பட்ட LPG ஆனது 04 கோளங்களுக்கு நிரப்பப்பட்டு, கோளங்களில் உள்ள மீதி LPG உடன் கலக்கப்பட்டது.

- 19 மே 2021 அன்று வழங்கப்பட்ட LPG ஐ கோளம் B மற்றும் C க்கு கலந்த பிறகு, கோளம் B மற்றும் C இல் உள்ள LPG இன் தரம் சரிபார்க்கப்பட வேண்டும், ஏனெனில் LPG இன் தரம் (LPG இன் கலவை உட்பட) 17 மே 2021 முதல் அளவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 20 மே 2021 அன்று 06.00 மணிநேர நிலவரப்படி கோளம் B மற்றும் C இல் உள்ள LPG இன் தரம் சுயாதீன ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

- கோளம் B மற்றும் C இல் உள்ள LPG ஐப் பயன்படுத்தி எரிவாயு சிலிண்டர்களில் உள்ள LPG இன் தரம் (LPG இன் கலவை உட்பட) - 2.3 Kg, 5 Kg, 18 லிட்டர்கள், 12.5 Kg மற்றும் 37.5 Kg 17 மே 2021 முதல் இன்றுவரை உருவாக்கப்பட்டது இந்த LPG மேற்குறித்த கோளங்களுக்கு 17 மே 2021 அன்று நிரப்பப்பட்டமையானது குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைந்திருந்தது, அளவிடப்பட்டிருக்கவில்லை.

- LPG இன் மேற்கூறிய கலவை இறக்குமதிக்கு கொடுப்பனவு செலுத்துவதற்காக, தேவையான விவரக்குறிப்புகள் பூர்த்தி

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படவில்லை, இயக்குனர்கள் குழுவின் ஒப்புதல்கள் போன்றவாறான தேவையான ஒப்புதல்கள் நிதிப் பிரிவால் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii.) | சுமையேற்றும் துறைமுகத்தில் உள்ள அளவு சான்றிதழில் சுட்டிக்காட்டப்பட்ட LPG கலவைக்கும், மதிப்பாய்வு உட்பட்ட ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 31 கப்பல் ஒப்பந்தச் சீட்டு தொடர்பான வெளியேற்ற துறைமுகத்தில் உள்ள தர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட LPG கலவைக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருப்பது என்பதை தேர்வுச் சோதனைகள் வெளிப்படுத்தின. ஒப்பந்த உடன்படிக்கையின் படி வெளியேற்ற துறைமுகத்தில் LPG கலவையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக சுமையேற்றும் துறைமுகத்தில் உள்ள சுயாதீன ஆய்வாளர் சமர்ப்பித்த அளவுச் சான்றிதழைப் பயன்படுத்தி சுமையேற்றும் துறைமுகத்தில் உள்ள LPG அளவின் ப்ரோபேன் மற்றும் பியூட்டேனின் சதவீதத்தின் அடிப்படையில், குறிப்பிட்ட இறக்குமதிக்கான ஒரு MTக்குரிய (CP ) ஒப்பந்த விலை காரணமாக வழங்குனருக்கு துல்லியமற்ற கொடுப்பனவு செலுத்த முடிவு செய்யப்பட்டமை இதன் விளைவாக இருந்தது. | சுமையேற்றும் துறைமுகம் மற்றும் வெளியேற்ற துறைமுகம் ஆகியவற்றின் சோதனை முடிவானது, உற்பத்தியின் தன்மை, மாதிரி முறை, பயன்படுத்தப்படும் கருவி, கருவிகளின் அளவுத்திருத்தம் மற்றும் மனித திறன் ஆகியவற்றின் காரணமாக குறிப்பிடத்தக்க மாறுபாட்டைக் கொண்டிருக்கலாம் என்பது எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்வுகளாகும். அதனால்தான் அனைத்து எண்ணெய் மற்றும் எரிவாயு ஒப்பந்தங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோக விதிமுறைகளைப் பொறுத்து சுமையேற்றும் துறைமுகம் மற்றும் வெளியேற்ற துறைமுகம் ஆகியவற்றின் முடிவுகளுடன் பிணைக்கப்படுகின்றன. சர்வதேச எரிவாயு டேங்கர்கள் & டெர்மினல் ஆபரேஷன்ஸ் லிமிடெட் சமூகத்தின் ”திரவ எரிவாயு கையாளுதல் கோட்பாடுகள்” வெளியீட்டில் இது மிகவும் நன்றாக நிறுவப்பட்டிருக்கிறது. | நுகர்வோரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான வழங்குனர் ஒப்பந்தம் மற்றும் தரநியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பிற்குள் உற்பத்தி தரம் இருப்பதை கம்பனி உறுதி செய்ய வேண்டும். |
| (iv.) | வெளியேற்ற துறைமுகத்தில் தர அறிக்கையின் படி, மேல் உள்ள 31 கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டுக்களில் 06 கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டுக்களுடன் தொடர்புடைய LPG இன் கலவை தேவையான விவரக்குறிப்புக்குள் இருக்கவில்லை. | அனைத்து இறக்குமதிகளும் 420-830kpa அழுத்த வரம்பிற்குள் உள்ளன மற்றும் SLS 712:1988 இன் தேவைக்கு இணங்குகிறது. | |
| (v.) | வெளியேற்ற துறைமுகத்தில் தர அறிக்கைக்கு கூடுதலாக 2020 ஜனவரி 29 அன்று மற்றொரு | சுமையேற்றும் துறைமுகம் மற்றும் வெளியேற்ற துறைமுகம் ஆகியவற்றின் சோதனை முடிவு, | |

சுயாதீன ஆய்வாளரிடம் இருந்து இரண்டு கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டுக்கள் தொடர்பான LPG பற்றிய தர அறிக்கை பெறப்பட்டது. அறிக்கையின் படி, புரொப்பேன் எடை சதவீதம் 22.39 சதவீதம் மற்றும் சுமையேற்றும் துறைமுக தர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட புரொபேன் சதவீதத்துடன் 9.91 சதவீதம் வித்தியாசம் இருந்தது.

உற்பத்தியின் தன்மை, மாதிரி முறை, பயன்படுத்தப்படும் கருவி, கருவிகளின் அளவுத்திருத்தம் மற்றும் மனித திறன் ஆகியவற்றின் காரணமாக குறிப்பிடத்தக்க மாறுபாட்டைக் கொண்டிருக்க முடியும் என்பது எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்வுகளாகும். அதனால்தான் அனைத்து எண்ணெய் மற்றும் எரிவாயு ஒப்பந்தங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோக விதிமுறைகளைப் பொறுத்து சுமையேற்றும் மற்றும் வெளியேற்ற துறைமுக முடிவுகள் ஆகியவற்றுடன் பிணைக்கப்படுகின்றன.

இன்ரனஷனல் காஸ் ரேங்கஸ் & ரேமினல் ஆப்ரேஷன்ஸ் லிமிடெட் சமூகத்தின் மூலமான ”திரவ எரிவாயு கையாளுதல் கோட்பாடுகள்” இன் வெளியீட்டில் இது மிகவும் நன்றாக நிறுவப்பட்டுள்ளது.

(vi.) சுமையேற்றும் துறைமுகத்தின் அளவு சான்றிதழில் சுட்டிக்காட்டப்பட்ட LPG கலவைக்கும், வெளியேற்ற துறைமுகத்தின் தர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட LPG கலவைக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருப்பது கணக்காய்வில் கேள்விக்குறியாக இருந்தது. மேலும், ஒரு கப்பலில் LPG நிரப்பப்பட்ட இரண்டு கோளங்கள் இருந்தாலும் கூட, கப்பலில் உள்ள LPG இன் தரம் சுமையேற்றும் துறைமுகத்தில் ஒரே நேரத்தில் சரிபார்க்கப்பட்டிருந்தது (ஒரே ஒரு தர அறிக்கை இருந்ததால்). இருப்பினும், கப்பலின் ஒவ்வொரு கோளத்திலும் உள்ள LPG இன் தரம் வெளியேற்ற துறைமுகத்தில் சரிபார்க்கப்பட்டிருந்தது. (கோளம் 1 மற்றும் 2 க்கு தனியான தர அறிக்கை இருந்ததால்).

சாத்தியமான வேறுபாட்டைக் குறைக்கும் பொருட்டு இரண்டு சுமையேற்றும் துறைமுக அறிக்கைகளைக் கோருவதற்கான ஏற்பாட்டைச் செய்வோம்.

| | | | |
|---|---|---|---|
| (vii.) | வெளியேற்ற துறைமுகத்தில் உள்ள LPG இன் தர அறிக்கைகள் பெறுகைப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு ஆகிய இரண்டாலும் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை மற்றும் அது LGTLL ஆல் மட்டுமே ஆவணப்படுத்தப்பட்டிருந்தது. பெறுகைப் பிரிவானது LPG இன் பெறுகை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டாலும் கூட, விநியோக உடன்படிக்கையின் அனைத்து நிபந்தனைகள் மற்றும் தேவைகளுக்கு இணங்க LPG வழங்கப்பட்டுள்ளதா என்பது சரிபார்க்கப்படவில்லை, இது அவரது வேலை விபரணத்தின் படி பெறுகை தலைவரின் கடமையாகும். மறுபுறம், விநியோக உடன்படிக்கையின் அனைத்து நிபந்தனைகள் மற்றும் தேவைகளுடன் விநியோகம் செய்யப்பட்ட LPG இணங்குவது, LPG இன் கொடுப்பனவுக்கான அங்கிகாரம் அளிப்பதற்கான கட்டாயத் தேவையாகும். எவ்வாறாயினும், வெளியேற்ற துறைமுகத்தில் உள்ள LPG இன் தர அறிக்கைகள் கொடுப்பனவுக்கான அங்கிகாரம் அளிக்க நிதிப் பிரிவால் பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை அல்லது ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரிவில் தர அறிக்கைகளைப் படிக்க தொழில்நுட்பத் தகுதியுள்ள பணியாளர்கள் இல்லை மற்றும் உற்பத்தியின் தரத்தை அளவிடுவதற்குப் பொறுப்பேற்க மாட்டார்கள் மற்றும் LGTLL ஆனது மூன்றாம் தரப்பு ஆய்வாளரின் ஆதரவுடன் உற்பத்தி தரத்தை உறுதிசெய்த பிறகு ஏற்றுக்கொள்ளலைக் கையாளுகிறது. தரச் சரிபார்ப்பு, கட்டளைகளை ஏற்றுக்கொள்வது மற்றும் LPG இறக்குமதி தொடர்பான எந்த ஒப்புதலும் LGTLL இன் பொறுப்பாகும், மற்றும் கொடுப்பனவு செலுத்தும் திகதிக்கு முன்பே நடந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் வெளியேற்றம் செய்யப்பட்ட LPG இறக்குமதிகளுக்கு மட்டுமே நிதிப் பிரிவு கொடுப்பனவு செலுத்துகிறது. | LPG இன் தரத்தை உறுதி செய்வதற்காகத் தேவையான விவரக்குறிப்புகள் உள்ளகக் கட்டுப்பாட்டாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்ய, நிதி வல்லுநர்கள் கொடுப்பனவு செலுத்தும் முன் தர அறிக்கையைப் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும். |
| (viii.) | இறக்குமதி செய்யப்பட்ட LPG இன் விவரக்குறிப்பின் படி, LPG இல் உள்ள நாற்றம்(odorant) (எத்தில்மர்கேப்டன்) 1000 MT க்கு 26 லிட்டர் இருக்க வேண்டும். இருப்பினும், வாசனை சோதனையைத் தவிர, சுமையேற்றும் துறைமுகம் மற்றும் வெளியேற்ற துறைமுகம் ஆகியவற்றில் உள்ள சுயாதீன ஆய்வாளர்களால் இது அளவிடப்பட்டிருக்கவில்லை. | LPG இன் திரவ கட்டத்தில் 14 PPM நாற்றம்(odorant) இருக்க வேண்டும் என்ற SLS 712:1988 தேவையை அடைவதற்காக 1000MT க்கு 26 லிட்டர் LPG திரவத்தை சேர்க்க வேண்டும் என்ற விவரக்குறிப்பு குறிப்பிடப்பட்டிருந்தது, ஏனெனில் LPG திரவ கட்டத்தில் மேலே உள்ள செறிவை துல்லியமாக சரிபார்க்க எந்த சோதனை | LPG இன் தரத்தை உறுதி செய்வதற்காக பொருத்தமான சோதனை முறையைப் பயன்படுத்துவதன் மூலம் LPG பயனர்களின் பாதுகாப்பை கம்பனி உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எரிவாயு கசிவை பயனர்கள் உணரவும், எரிவாயு கசிவு ஏற்பட்டால் விபத்தைத் தவிர்க்கவும், நிரப்பப்பட்ட எரிவாயு சிலிண்டர்களில் போதுமான அளவு நாற்றம்(odorant) இருப்பது உறுதி செய்யப்படவில்லை. | முறையும் இல்லை, சோதனையின் ஒரே முறை ”வாசனை சோதனை” ஆகும், இது விவரக்குறிப்பு அட்டவணையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் வெளியேற்ற துறைமுக மாதிரி சோதனையில் அதற்கேற்ப மேற்கொள்ளப்படுகிறது.<br>அதனால்தான், அதிகாரிகள் சமீபத்தில் CAA, SLSI, ITI ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணியாளர்கள் குழுவை வாசனைப் பரிசோதனை செய்வதற்கும் வெளியேற்றுவதற்கான இறக்குமதிக்கு ஒப்புதல் அளிக்கவும் அனுப்ப வேண்டியிருந்தது. | |
| (ix.) | ஒவ்வொரு மாதத்தின் CP முந்தைய மாதத்தின் கடைசி நாளில் அல்லது நடப்பு மாதத்தின் 01 நாளில் வெளியிடப்படும். ஒரு MTக்கு ப்ரோபேன் மற்றும் பியூட்டேனுக்கு பரிந்துரைக்கப்பட்ட மாதத்தின் CP இல் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்கள் இருந்தன. மேற்கூறிய CP ஏற்ற இறக்கங்களின் படி, பின்வரும் காரணங்களால் குறைந்த விலையின் நிகழ்வுகளில் கிரய நலன்களைப் பெறுவதற்கான வாய்ப்பும் மற்றும் அதிக விலையின் நிகழ்வுகளில் கிரய அதிகரிப்பைக் குறைக்கும் வாய்ப்பும் கம்பனிக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>• 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான கேள்வி முன்கணிப்பில் சுமார் 99 சதவீதம் (740,000 MT இல் இருந்து +/- 10 சதவீதத்திற்கு உட்பட்டது) இந்த பெறுகை மூலம் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், பொருத்தமான அரசாங்க பெறுகை வழிகாட்டியைப் பின்பற்றி கொள்வனவு | LPG என்பது இலங்கையின் அத்தியாவசியப் உற்பத்திகளில் ஒன்றாகும் மற்றும் இலங்கையின் LPG சந்தையைப் பூர்த்தி செய்வதற்கு தொடர்ச்சியான விநியோகம் தேவைப்படுகிறது.<br>கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் வரம்புகளைக் கருத்தில் கொண்டு, அவசர பெறுகைகளை (SPOT) கொள்வனவு செய்வதற்குப் பதிலாக 1 அல்லது 2-வருட ஒப்பந்த உடன்படிக்கையுடன் தொடர முகாமைத்துவம் முடிவு செய்துள்ளது.<br><br>• 8,000 MT + 3,000 MT களஞ்சியக் கிடைப்பனவு, இருப்பினும், கேள்வியைப் பூர்த்தி செய்ய தினசரி 1,000-1,200 MT தேவையாகும்.<br><br>• அர்ப்பணிக்கப்பட்ட கம்பனியானது, தடையில்லா விநியோகத்துடன் செயல்பட கப்பல்கள் மற்றும் செயல்பாட்டுத் திட்டம் என்பவை காலம் முழுவதும் | விலை ஏற்ற இறக்கங்கள் ஏற்படும் பட்சத்தில் நாட்டிற்கு நலன் பெற உடன்படிக்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அதிக நெகிழ்வுத்தன்மையை கம்பனி ஒருங்கிணைக்க வேண்டும். |

செய்யப்படும் அவசர பெறுகை (SPOT) மூலம் குறைந்த விலையைப் பெறுவதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- உடன்படிக்கையின் 12 வது பிரிவின் படி, நடப்பு மாதத்தின் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், கம்பனி அடுத்த மாதத்திற்கு தேவையான அளவை சமர்ப்பிக்கும்/பரிந்துரைக்கும். அந்த நேரத்தில், அடுத்த மாதத்திற்கான CP வெளியிடப்பட்டிருக்கவில்லை (இது நடப்பு மாதத்தின் கடைசி நாளில் அல்லது அடுத்த மாதத்தின் 1 நாளில் வெளியிடப்படும்.). எனவே, குறைந்த விலையின் சூழ்நிலையில் அதிக அளவை பரிந்துரைக்கும் வாய்ப்பு மற்றும் அதிக விலையின் சூழ்நிலையில் குறைந்த அளவை பரிந்துரைக்கும் வாய்ப்பு கம்பனிக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- கம்பனிக்கு வரையறுக்கப்பட்ட களஞ்சிய வசதிகள் உள்ளன. கெராவலபிட்டியா, மாபிமா மற்றும் ஹாம்பந்தோட்டாவின் களஞ்சிய வசதி முறையே 8,000 MT, 424MT மற்றும் 2,700 MT ஆகும். இதன் விளைவாக, LPG முன்னோக்கி வரைபுகளில் குறைந்த விலை போக்கின் சூழ்நிலையில் அதிக அளவு பரிந்துரைக்கும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

- கெராவலாபிட்டியாவில் CBM வசதியில் கப்பலின் அதிகபட்சமாக அனுமதிக்கக்கூடிய திறன் 20,000 M3 ஆகும் (ஒரு கப்பலுக்கு சாதாரண அளவு 2,500MT இருந்து 4,000MT க்கு வைக்கப்பட வேண்டும்.

- குறைவான களஞ்சிய வசதியினால் நியமனங்களுடன் கணிசமான நன்மைகளைப் பெற முடியவில்லை. மேலும் ஒரு தொழில்துறை விதிமுறையாக, வாங்குபவர் தளவாட ஏற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன் வழங்குனருக்குத் தேவையை வழங்க வேண்டும்.

முன்மொழியப்பட்ட திட்டங்கள் / உத்திகள் வரிசையில்

- பெரிய கப்பல்களை வழங்குவதற்காக CBM வசதியை SPBM க்கு விரிவுபடுத்துவதற்கு.

ஒவ்வொன்றும் 3000MT இன் இரண்டு கோளங்களுக்கு களஞ்சிய வசதியை விரிவுபடுத்துவதற்கு.

LPG என்பது இலங்கையின் அத்தியாவசியப் உற்பத்திகளில் ஒன்றாகும் மற்றும் இலங்கையின் LPG சந்தையைப் பூர்த்தி செய்வதற்கு தொடர்ச்சியான விநியோகம் தேவைப்படுகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் வரம்புகளைக் கருத்தில் கொண்டு, அவசர பெறுகைகளை (SPOT) கொள்வனவு செய்வதற்குப் பதிலாக 1 அல்லது 2-வருட ஒப்பந்த உடன்படிக்கையுடன் தொடர முகாமைத்துவம் முடிவு செய்துள்ளது.

- 8,000 MT + 3,000 MT களஞ்சியக் கிடைப்பனவு, இருப்பினும், கேள்வியைப் பூர்த்தி செய்ய தினசரி 1,000-1,200 MT தேவையாகும்.

இறக்குமதிச் செலவைக் குறைப்பதற்கும், இறுதி நுகர்வோருக்கு சாத்தியமான குறைந்த விலையில் LPG ஐ வழங்குவதற்கும் கம்பனி முறையான மூலோபாயத் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | இடைப்பட்டதாக இருக்கும்) மற்றும் 07 பெர்த்த்கள்(berths) பொதுவாக மாதத்திற்கு இயக்கப்படுகின்றன. எனவே, மாதத்திற்கு இறக்குமதி செய்யக்கூடிய அளவு வரையறுக்கப்பட்டுள்ளது. | • அர்பணிக்கப்பட்ட கம்பனியானது, தடையில்லா விநியோகத்துடன் செயல்பட கப்பல்கள் மற்றும் செயல்பாட்டுத் திட்டம் என்பவை காலம் முழுவதும் வைக்கப்பட வேண்டும்.<br><br>• குறைவான களஞ்சிய வசதியினால் நியமனங்களுடன் கணிசமான நன்மைகளைப் பெற முடியவில்லை. மேலும் ஒரு தொழில்துறை விதிமுறையாக, வாங்குபவர் தளவாட ஏற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன் வழங்குனருக்குத் தேவையை வழங்க வேண்டும்.<br><br>முன்மொழியப்பட்ட திட்டங்கள் / உத்திகள் வரிசையில்<br><br>• பெரிய கப்பல்களை வழங்குவதற்காக CBM வசதியை SPBM க்கு விரிவுபடுத்துவதற்கு.<br><br>• ஒவ்வொன்றும் 3000MT இன் இரண்டு கோளங்களுக்கு களஞ்சிய வசதியை விரிவுபடுத்துவதற்கு. | |
| (x.) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் குறைந்த CP ஆனது 2020 ஏப்ரலில் ப்ரோபேனுக்கு 230 USD ஆகவும், பூட்டேனுக்கு 240 USD ஆகவும் இருந்தது மற்றும் ஏப்ரல் 2020 இற்காக பரிந்துரைக்கப்பட்ட அளவு 26,000 MT ஆகும். உயர்ந்த CP ஆனது நவம்பர் 2021 இல் ப்ரோபேனுக்கு 870 USD ஆகவும், பியூட்டேனுக்கு 830 USD ஆகவும் இருந்தது மற்றும் நவம்பர் 2021 க்கு பரிந்துரைக்கப்பட்ட அளவு 33,000 MT ஆகும். எனவே, குறைந்த விலைகளின் நிகழ்வுகளில் செலவு | LPG என்பது இலங்கையின் அத்தியாவசியப் உற்பத்திகளில் ஒன்றாகும் மற்றும் இலங்கையின் LPG சந்தையைப் பூர்த்தி செய்வதற்கு தொடர்ச்சியான விநியோகம் தேவைப்படுகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் வரம்புகளைக் கருத்தில் கொண்டு, அவசர பெறுகைகளை (SPOT) கொள்வனவு செய்வதற்குப் பதிலாக 1 அல்லது 2-வருட ஒப்பந்த உடன்படிக்கையுடன் தொடர முகாமைத்துவம் முடிவு செய்துள்ளது. | குறைந்த விலையின் நிகழ்வுகளில் அதிக அளவை பரிந்துரைப்பதன் மூலம் சந்தையில் ஏற்படும் விலை ஏற்ற இறக்கங்களின் பலனைப் பெற கம்பனி சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு மற்றும் அதிக விலைகளின் நிகழ்வுகளில் செலவு அதிகரிப்பைக் குறைப்பதற்கான வாய்ப்பு ஆகியவை கம்பனியால்<br>பெறப்பட்டிருக்கவில்லை. | • 8,000 MT + 3,000 MT களஞ்சியக் கிடைப்பனவு, இருப்பினும், கேள்வியைப் பூர்த்தி செய்ய தினசரி 1,000-1,200 MT தேவையாகும்.<br><br>• அர்பணிக்கப்பட்ட கம்பனியானது, தடையில்லா விநியோகத்துடன் செயல்பட கப்பல்கள் மற்றும் செயல்பாட்டுத் திட்டம் என்பவை காலம் முழுவதும் வைக்கப்பட வேண்டும்.<br><br>• குறைவான களஞ்சிய வசதியினால் நியமனங்களுடன் கணிசமான நன்மைகளைப் பெற முடியவில்லை. மேலும் ஒரு தொழில்துறை விதிமுறையாக, வாங்குபவர் தளவாட ஏற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன் வழங்குனருக்குத் தேவையை வழங்க வேண்டும்.<br><br>முன்மொழியப்பட்ட திட்டங்கள் / உத்திகள் வரிசையில்<br><br>• பெரிய கப்பல்களை வழங்குவதற்காக CBM வசதியை SPBM க்கு விரிவுபடுத்துவதற்கு.<br><br>ஒவ்வொன்றும் 3000MT இன் இரண்டு கோளங்களுக்கு களஞ்சிய வசதியை விரிவுபடுத்துவதற்கு. | |
| (xi.) | வழங்குனருடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரிவு 1.4 இன் படி, வாங்குபவர் மாதாந்த முன்மொழிவுடன் அல்லது வேறு ஏதேனும் சிறப்புத் தேவைகளுக்காக புரொப்பேன் மற்றும் பியூட்டேன் ஆகியவற்றின் பொருத்தமான கலவையைக் குறிப்பிடுவார். எவ்வாறாயினும், அதிக மாதாந்த | உடன்படிக்கையில் உள்ள பிரிவு 1.4 இன் விதிகளின் கீழ், வாங்குபவர் உற்பத்திக்கான சிறப்புத் தேவை இருக்கும் போது மட்டுமே ப்ரொபேன் மற்றும் பியூட்டேன் ஆகியவற்றின் பொருத்தமான கலவையை மட்டுமே குறிப்பிட கருதுகிறார் என்பதை கவனத்தில் கொள்ளவும், , இது இணைப்பு 1 | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வரம்புகளுக்குள் பொருத்தமான கலவையை பரிந்துரைப்பதன் மூலம் இறக்குமதி கிரயத்தைக் குறைக்கும் வாய்ப்பை கம்பனி நாட வேண்டும். |

CP அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளில் கூட இந்த ஏற்பாடு கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை மற்றும் ப்ரோபேனுக்கான CP ஆனது LPG இன் விலையைக் குறைப்பதற்காக பியூட்டேனுக்கான CP ஐ விட அதிகமாக இருந்தது. எடுத்துக்காட்டாக, நவம்பர் 2021க்கான மாதாந்திர முன்மொழிவு ப்ரோபேன் மூலம் 30 சதவீதம் மற்றும் பியூட்டேனில் 70 சதவீதம் என குறிப்பிடப்பட்டிருந்தால், USD 74,938.51 குறைக்கப்பட்டிருக்கலாம்.

இல் நிர்ணயிக்கப்பட்ட விவரக்குறிப்புக்கு அப்பாற்பட்டது. அதாவது சாதாரண உற்பத்தி விவரக்குறிப்பு தாள். வழக்கமான மாதாந்த நியமனத்திற்கு இது பொருந்தாது, ஏனெனில் நாங்கள் அதே விவரக்குறிப்பினுள் உற்பத்தியை உத்தரவிடுகிறோம்.

(c.) 18 லிட்டர் பிரீமியம் கலப்பு (hybrid) LP காஸ் சிலிண்டரின் விநியோகம்

(i.) கம்பனியின் தலைவரால் அரச கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட 28 ஏப்ரல் 2021 திகதியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 18 லிட்டர் பிரீமியம் கலப்பு (hybrid) எரிவாயு சிலிண்டரின் LPG இன் கலவையானது (நீராவி அழுத்தம் (vapor pressure ) 105 psig, 724 kpa @ 100F இருந்த போது புரோபேன், 40 சதவீதம் முதல் 50 சதவீதம் மற்றும் பியூட்டேன், 50 சதவீதம் முதல் 60 சதவீதம் வரை) 2010 முதல் கம்பனியால் கருதப்படும் வரம்புகளுக்குள் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. (எடை சதவிகிதம் மூலம் அதிகபட்சம் 40 சதவிகிதம் ப்ரோபேன் வரம்புக்குள்). கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 18 லிட்டர் பிரீமியம் கலப்பு (hybrid) எரிவாயு சிலிண்டரில் உள்ள 105 psig (724 kpa) @ 100F இன் நீராவி அழுத்தம் 2010 முதல் கம்பனி கருதிய அதிகபட்ச நீராவி அழுத்தத்திற்குள் இருந்தாலும் (அளவு (gauge) @ 37.8 Deg.C LPG இன் அதிகபட்ச நீராவி அழுத்த 830 kpa ஆகும்.) இது சந்தையில்

லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் அனைத்து சீராக்கிகளும் (regulators) இலங்கை தரநிலைகள் நிறுவனம் SLS 712:1998 வழங்கிய LPG தரநிலையில் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச அழுத்த வரம்பு (1430 psi) உடன் இணங்குகின்றன. லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் , 6 பார் நுழைவு அழுத்த (inlet pressure) மதிப்பீட்டைக் கொண்ட எந்த சீராக்கியையும் இறக்குமதி செய்வதோ அல்லது விநியோகிப்பதோ இல்லை. லிட்ரோ கேஸ் லங்காவினால் விநியோகிக்கப்படும் சீராக்கிகளின் நுழைவு அழுத்த (inlet pressure) மதிப்பீடு எப்போதும் 14 பார்களாகவே உள்ளது. 2010 முதல் லிட்ரோ கேஸ் லங்காவால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் LPG ஆனது எப்போதும் 420-830 max.kpa @ 37.8deg.C க்கு

LPG மற்றும் தொடர்புடைய துணைக்கருவிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் குறிப்பிடப்பட்ட விவரக்குறிப்புகளுக்குள் இருப்பதை கம்பனி உறுதிசெய்ய வேண்டும் மற்றும் ஏதேனும் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் ஏற்பட்டால் அந்தந்த அதிகாரிகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| | கிடைக்கும் சில வகையான எரிவாயு சீராக்கிகளால் (regulators) அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச நுழைவு அழுத்தத்திற்குள் (inlet pressure) இல்லை. (600 kpa -6 பார்). | இடையிலான நீராவி அழுத்தத்தைக் (vapor pressure) கொண்டுள்ளது. மற்றும் SLS 712:1998 LPG தரநிலையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்பு அளவுகோல்களுக்கு ஏற்ப உள்ளது. |
| (ii.) | 18 லிட்டர் பிரீமியம் கலப்பு (hybrid) காஸ் சிலிண்டரில் உள்ள LPG இன் கலவையை நிர்ணயிப்பதில் சந்தையில் கிடைக்கும் சில வகையான காஸ் சீராக்கிகளால் (regulators) (600 kpa - 6 பார்) அனுமதிக்கப்படும் அதிகபட்ச நுழைவாயில் அழுத்தம் (inlet pressure) பரிசீலிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | மற்ற இறக்குமதியாளர்களால் இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் LPG கட்டுப்பாட்டாளர்களின் தரம்/ விவரக்குறிப்பைக் கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் கட்டுப்பாட்டின் கீழ் வரவில்லை. ஏதேனும் இருந்தால், இது இலங்கை தரநியம நிறுவனத்தால் தரப்படுத்தப்பட வேண்டும் மற்றும் இலங்கை சுங்கத்தின் இறக்குமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தால் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.<br>லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் ஆனது 6பார் (bar) க்கும் குறைவான நுழைவாயிலின் அழுத்த (inlet pressure) மதிப்பீட்டைக் கொண்ட சீராக்கிகளை (regulators) இறக்குமதி செய்து விநியோகிக்காததால், அது எங்களுக்குப் பொருந்தாது. 420-830 max kpa என்பது லிட்ரோ கேஸ் LPG விவரக்குறிப்பாகும், இது லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் ஆல் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் சீராக்கிகளின் 14 பார் நுழைவாயிலின் அழுத்த (inlet pressure) மதிப்பீட்டை விட மிகவும் குறைவாக உள்ளதும் கவனிக்கப்பட்டது. |

(iii.) மேலே குறிப்பிடப்பட்ட கடிதத்தின் மூலம் 18 லிட்டர் பிரீமியம் ஹைப்ரிட் எரிவாயு சிலிண்டருக்கான LPG இன் விவரக்குறிப்பு குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஏப்ரல் 2021 முதல் அக்டோபர் 2021 வரையிலான காலகட்டத்தில் (சந்தைக்கு 18 லிட்டர் எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கும் காலம்) LPG இன் கலவை 17 மே 2021 அன்று வந்த ஒரு இறக்குமதியைத் தவிர எடை சதவீதத்தின் மூலம் குறைந்தபட்சம் 25 சதவீதம் முதல் அதிகபட்சம் 40 சதவீதம் வரை புரொப்பேன் மற்றும் மீதமுள்ள 75 சதவீதம் முதல் 60 சதவீதம் வரை பியூட்டேன் ஆகும். 17 மே 2021 முதல் இன்றுவரை 17 மே 2021 அன்று கோளம் B மற்றும் C இல் உள்ள LPG ஐப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட 18 லிட்டர் எரிவாயு சிலிண்டர்களில் உள்ள LPG இன் தரம் (LPG இன் கலவை உட்பட) குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளமை அளவிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை இந்த நிறுவனம் அவர்களின் உரிமையின் கீழ் இருந்தபோதும், கடந்த காலங்களில் தோராயமான இறுதி கலவைகளை கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்பட்டபோதும், ஷெல் பெட்ரோலியத்திலிருந்து எங்களுக்கு மரபுரிமையாகக் கிடைத்த சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலப்புக் கருவியைப் பின்பற்றினோம். இந்த அறிக்கையின் 2.8.1 முதல் 2.8.4 வரை விவாதிக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளில் செயல்பாட்டின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மை நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, கோளம் B மற்றும் C இல் உள்ள பொருளின் தரம் அதே கலப்பு கருவியைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்ட விகிதங்களால் உறுதி செய்யப்பட்டது. எவ்வாறாயினும், மேலே உள்ள அனுமானத்தின் சரிபார்ப்புக்காக, மாதிரி சோதனையைப் பயன்படுத்தி ஜியோ கெம் லங்கா பிரைவேட் லிமிடெட் வழங்கும் கலப்பு கலவைகளின் ஹைட்ரோகார்பன் கலவையைக் கணக்கிடுவதற்கான சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறையைப் பின்பற்றுவதன் மூலம், கோளம் B மற்றும் C இன் இறுதி கலவைகளுக்கான தர அறிக்கைகளை நாங்கள் கோரினோம். ஆரம்ப LPG பொதிகளின் அறிக்கைகள், அவை கலப்பதற்குப்

| | | |
|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டன. சுமையேற்றும் துறைமுகம் மற்றும் வெளியேற்ற துறைமுக சோதனைகள் பின்வரும் அனைத்து பொதிகளுக்கும் தேவையான அளவுக்குள் இருப்பதால், ஆரம்ப கலவைக்குப் பிறகு மீண்டும் மீண்டும் கலவையை சரிபார்க்க எந்த நடைமுறையும் தேவையும் இல்லை. எனவே, மேலும் சோதனை தேவையில்லை. எனவே, கோளம் B மற்றும் C இலிருந்து சிலிண்டர் நிரப்புவதற்காக சேமிக்கப்பட்டு வழங்கப்படும் அனைத்து தயாரிப்புகளும் தேவைகளுக்கு முழுமையாக இணங்குகின்றன. | |
| (d) வெறுமையான சிலிண்டர்களுக்கு LPG நிரப்பும் செயல்முறை | | |
| (i.) கெரவலபிட்டியவில் உள்ள எரிபொருள் நிரப்பும் ஆலையின் நிரப்பு செயல்முறைக்கான செயல்பாட்டு கையேடு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு அறிக்கைக்கான பதிலுடன் செயல்பாட்டு கையேடு சமர்ப்பிக்கப்பட்டது. | பயனுள்ள கணக்காய்வை உறுதி செய்வதற்காக கம்பனி கணக்காய்வின் போது கோரப்பட்ட தகவலை சமர்ப்பிக்க வேண்டும். |
| (ii.) சிலிண்டர்களில் உள்ள LPG இன் தரம் தொடர்பான எந்தவொரு பிரச்சினையிலும் சந்தையில் இருந்து எரிவாயு சிலிண்டர்களை திரும்பப் பெறுவதற்காக சந்தைக்கு விநியோகிக்கப்படும் மீள்நிரப்பு செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டர்களைக் கண்டறிய கம்பனியால் எந்த அடையாள அமைப்பும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | புதிய சுருக்க முத்திரையை அறிமுகப்படுத்த றெகைத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது, அதன் கீழ் பகுதியில் தொகுதி எண் குறிக்கப்பட்டுள்ளது, மேலும் அடுத்த நிரப்புதலுக்கான நிரப்பு ஆலைக்கு திரும்பும் வரை அது சிலிண்டருடன் இருக்கும். | வாடிக்கையாளர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, சிலிண்டர்களில் உள்ள LPG இன் தரம் குறித்த எந்தவொரு பிரச்சினையிலும் சந்தையில் இருந்து எரிவாயு சிலிண்டர்களை திரும்பப் பெறுவதற்காக சந்தையில் விநியோகிக்கப்படும் மீள்நிரப்பு செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டர்களைக் கண்டறிய சரியான அடையாள அமைப்பை கம்பனி நிறுவ வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (i.) | 2021 நவம்பர் வரை கெரவலப்பிட்டியில் உள்ள எரிபொருள் நிரப்பும் ஆலையில் எரிவாயு சிலிண்டரின் அடைப்பானில் (valve) இருந்து எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிவியல் முறை மூலம் சரிபார்க்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | இந்த நோக்கத்திற்காக இலத்திரனியல் கேஸ் கண்டுபிடிப்பான் (Electronic Gas Detector) இடத்தில் உள்ளது. இது ஆலை உற்பத்தியாளரிடமிருந்து நாங்கள் பெற்ற நிரப்பு ஆலை தொகுப்பின் ஒரு பகுதியாகும்.<br>இது 1999 ஷெல் வாயு (shell gas) காலத்திலிருந்து நடைமுறையில் உள்ளது. கெரவலப்பிட்டி எரிபொருள் நிரப்பு நிலையம் 2013 இல் நிறுவப்பட்டது. அசல் ஆலையானது ஒவ்வொரு நிரப்பு வரிசையிலும் அதே இயந்திரங்களைக் கொண்டிருந்தது. இந்த இயந்திரங்கள் LPG தொழில்துறைக்காக அறிவியல் பூர்வமாக வடிவமைக்கப்பட்டு இன்றுவரை இயங்கி வருகின்றன. | பயனர்களின் பாதுகாப்பை மேம்படுத்த, நிரப்பு ஆலையின் தரம் மற்றும் பாதுகாப்பு சோதனைகளை கம்பனி மேம்படுத்த வேண்டும். |
| (ii.) | நவம்பர் 2021 வரை மாதிரி அடிப்படையில் எரிவாயு சிலிண்டரின் நீராவி அழுத்தம் (vapor pressure) சரிபார்க்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | | |
| (iii.) | சிலிண்டரின் உடற்பகுதியின் வாயு கசிவானது நீர் குளியல் பயன்படுத்தி சரிபார்க்கப்படுகிறது.<br>இருப்பினும், மனித பிழைகள் காரணமாக சிலிண்டரின் உடற்பகுதியின் வாயு கசிவு இருப்பதற்கான சில நிகழ்வுகள் கண்டறியப்படாது. | | |
| (iv.) | உற்பத்தி ஆண்டு, புதுப்பித்த ஆண்டு, மறுசீரமைப்பு ஆண்டு மற்றும் அகற்றப்பட்ட ஆண்டு போன்ற தகவல்களை உள்ளடக்கிய தொகுதி வாரியாக சிலிண்டர்களை அடையாளம் காண கம்பனியால் இயக்கப்படும் வெறுமையான சிலிண்டர்களுக்கான தரவுத்தளம் பராமரிக்கப்படவில்லை. | தேவையான தகவல்களைப் பெறுவதற்கு கீழே உள்ள ஆவணங்கள் பராமரிக்கப்படுகின்றன.<br>1. உற்பத்தி ஆண்டு - தேவையான பதிவுகள் மற்றும் அனைத்து தொடர்புடைய தகவல் வைத்திருக்க வேண்டும்.<br>2. புதுப்பித்த ஆண்டு - சிலிண்டரில் குறிக்கப்பட்டுள்ளது. லிட்ரோ ஒவ்வொரு நாளும் சிலிண்டர்களின் எண்ணிக்கையுடன் ஒரு பதிவை பராமரிக்கிறது.<br>3. மறுசீரமைப்பு ஆண்டு - சிலிண்டரில் குறிக்கப்பட்டுள்ளது. | தேவைப்படும் போது தேவையான தகவல்களைப் பெறுவதற்கு நிறுவனம் தகவல் அமைப்பை நிறுவ வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 4. அகற்றல் ஆண்டு- சிலிண்டர் வாழ்நாள் முன்னரே தீர்மானிக்கப்படவில்லை. மறுசீரமைப்பு சோதனையில் திருப்தி அடைந்தவரை அதைப் பயன்படுத்தலாம். | |
| (v.) | உற்பத்தி ஆண்டு போன்ற அகற்றும் சிலிண்டர்களின் தகவல்கள் பராமரிக்கப்படவில்லை. அகற்றப்பட்ட சிலிண்டர்களின் உற்பத்தி ஆண்டைக் கருத்தில் கொள்ளாமல் புத்தகங்களில் உள்ள மிகப் பழமையான சிலிண்டர்களிடமிருந்து அகற்றப்பட்ட சிலிண்டர்கள் கழிக்கப்பட்டன. | ஷெல் கேஸ் (Shell Gas) காலத்திற்கு முன்பு, ஒட்டுமொத்த சிலிண்டர் தொகையில் சரியான பதிவுகள் இல்லை. எனவே, 2000 ஆம் ஆண்டில் ஷெல் ஆனது சிலிண்டர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையைக் கண்டறிய ஒரு கணக்கெடுப்பை நடத்தியது. அந்த முடிவின் அடிப்படையில், தற்போது வரை பதிவேடு பராமரிக்கப்பட்டு வந்தது. | கம்பனி சிலிண்டர்களை அகற்றுவதற்கு முன் அடையாளம் காண சரியான நடைமுறையை நிறுவி, அதற்கேற்ப சொத்து பதிவுகளை புதுப்பிக்க வேண்டும். |
| (vi.) | சிலிண்டர்களின் ஆயுட்காலம் மறுசீரமைப்பு செய்வதற்கு முன்பும் மறுசீரமைப்பு செய்வதற்குப் பிறகும் 15 ஆண்டுகளாக இருந்தாலும், மறுசீரமைப்பு செய்வதற்கு முன்பும், மறுசீரமைப்பு செய்யப்பட்ட பிறகும் ஆயுட்காலத்தை விட அதிகமாக இருக்கும் சிலிண்டர்களின் மொத்த எண்ணிக்கையை கண்டறிய எந்த முறையும் இல்லை. | செயல்பாட்டு நடைமுறையின் படி, ஆலையில் உள்ள ஒவ்வொரு சிலிண்டரையும் லிட்ரோ கண்ணால் சரிபார்த்து, மறுசீரமைப்புக்காக சிலிண்டர்களைப் பிரித்தெடுக்கிறது. சிலிண்டர் சுழற்சி விகிதம் வாடிக்கையாளரின் பயன்பாட்டில் தங்கியுள்ளது. ஆலைக்கு திரும்பும் சிலிண்டர்கள் ஒரு மாதம் முதல் பல ஆண்டுகள் வரை மாறுபடும் என்பது அவதானிக்கப்பட்டது. ஆலைக்கு வரும் சிலிண்டரின் மாதிரியை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மட்டுமே மதிப்பீடு செய்ய முடியும். | சிலிண்டர்கள் எல்லா நேரங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்தில் இருப்பதையும் வாடிக்கையாளர் பாதுகாப்பை உறுதி செய்வதையும் கம்பனி உறுதி செய்ய வேண்டும். |
| (vii.) | அடைப்பானின் (valve) ஆயுட்காலம் 15 ஆண்டுகள் என்றாலும் கூட, அதன் வாழ்நாளைத் தாண்டிய மொத்த அடைப்பான்களின் (valve ) எண்ணிக்கையைக் கண்டறிய எந்த முறையும் இல்லை. | கிட்டத்தட்ட எங்கள் மீள்நிரப்பு சிலிண்டர்களின் அனைத்து அடைப்பான்களும் (valves) 15 வருடங்களுக்கும் குறைவானவை. பின்வரும் சந்தர்ப்பங்களில், வால்வை சரிபார்த்து மாற்றுவோம்.<br>1. சிலிண்டர்கள் மறுசீரமைக்கப்படும் போது –<br>2. வெறுமையான சிலிண்டர் ஆலையில் இறக்கப்படும் போது – பார்த்து ஆய்வு செய்த பிறகு அடைப்பானை (valve) மாற்றுவதற்காக சிலிண்டர் அகற்றப்படும். | அடைப்பான்கள் (valve)எல்லா நேரங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்தில் இருப்பதையும் வாடிக்கையாளர் பாதுகாப்பை உறுதி செய்வதையும் கம்பனி உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 3. நிரப்புதலுக்குப் பின்னரான சரிபார்ப்பு - இலத்திரனியல் கசிவு கண்டுபிடிப்பானில் (electronic leak detector ) சரிபார்க்கப்படும். | |
| (viii.) | கம்பனியுடன் 83 மொத்த வாடிக்கையாளர்கள் பரிவர்த்தனை செய்துள்ளனர். இருப்பினும், கணக்காய்வுக்கு 31 உடன்படிக்கைகள் மட்டுமே கிடைத்துள்ளன. எனவே, மீதமுள்ள 52 மொத்த வாடிக்கையாளர்களுடன் கம்பனி உடன்படிக்கை செய்துள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. | மீதி உடன்படிக்கைகள் நிதி பிரிவிடம் உள்ளன மற்றும் எந்த நேரத்திலும் சரிபார்க்கலாம். | ஒவ்வொரு மொத்த வாடிக்கையாளருடனும் செல்லுபடியாகும் உடன்படிக்கை இருப்பதை கம்பனி உறுதிசெய்து, அந்த உடன்படிக்கைகள் கணக்காய்வுக்கு கிடைப்பனவாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். |
| (e) | மொத்த மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கான விலையைக் கணக்கிடும் போது, CP விலையானது புரொப்பேன் இருந்து 30 சதவிகிதம் மற்றும் பியூட்டேனில் இருந்து 70 சதவிகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. ப்ரோபேன் விலையானது பியூட்டேன் விலையை விட அதிகமாக இருந்த சமயங்களில் மேற்கூறிய கணிக்கப்பட்ட CP விலையை விட உண்மையான CP விலை அதிகமாக இருந்ததும் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட LPG இன் புரோபேன் கலவை 30 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்ததும் அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, மொத்த மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கான விலையை தீர்மானிப்பதற்கான உண்மையான இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தி விலை (IPC) ஆனது கருதப்பட்ட IPC ஐ விட அதிகமாக இருந்தது. 2021 ஆம் ஆண்டில் 10 மாதங்களில் ப்ரோபேன் விலையானது பியூட்டேன் விலையை விட அதிகமாக இருந்தமை மற்றும் சில சந்தர்ப்பங்களில் LPG இன் இறக்குமதி செய்யப்பட்ட புரொப்பேன் கலவை 30 சதவீதத்திற்கும் | வணிக விலை எப்போதும் புரொப்பேன் 30% மற்றும் பியூட்டேன் 70% கலவை முழுவதுமாக ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. மேலும் இந்த ஆண்டு மட்டும் புரொப்பேன் விலை அதிகமாக உள்ளது. ஒவ்வொரு கப்பலுக்கும் விலை நிர்ணயம் செய்வது நடைமுறையில் இல்லை. | வருடாந்த கேள்விமனு கோரின் நிபந்தனைகளில் பயன்படுத்தப்படும் வணிக ரீதியாக தீர்மானிக்கும் போது, கலவையின் ஏற்ற இறக்கங்களை இணைப்பதற்கான வாய்ப்பை கம்பனி தேட வேண்டும். |

அதிகமாக இருந்தமை என்பவை மேலும் அவதானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| (f.) CAA இன் தலைவருக்கு அனுப்பப்பட்ட 02 பெப்ரவரி 2021 திகதியிட்ட கடிதத்தின்படி, கம்பனியானது 12.5kg, 5kg மற்றும் 2.3kg சிலிண்டரின் விலை திருத்ததைக் கோரியிருந்தது (கொழும்பு சம்மந்தப்பட்ட பகுதிகளுக்கு ஜனவரி மற்றும் பிப்ரவரி 2021 செலவு கூறுகளின் அடிப்படையில் கோரப்பட்ட விலை ரூ.2,204, ரூ.882 மற்றும் ரூ.419 ஆகும்.) மற்றும் திறைசேரி செயலாளருக்கு அனுப்பப்பட்ட மார்ச் 26, 2021 திகதியிட்ட கடிதத்தின்படி, கம்பனியானது தொழில்த்துறை/கம்பனியின் நிலைத்த தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு 20 ஏப்ரல் 2021 முதல் அமுலுக்கு வரும் வகையில் ரூ.1,850 முதல் ரூ.1,900 வரை விலையை உயர்த்த பரிந்துரைத்துள்ளது. மேலும், CAA இன் தலைவருக்கு அனுப்பப்பட்ட 28 யூன் 2021, 12 யூலை 2021 மற்றும் 11 ஆகஸ்ட் 2021 திகதியிட்ட கடிதங்களின்படி, கம்பனியானது ஜனவரி 2021 முதல் யூலை 2021 வரையான வரிக்கு முந்தைய மொத்த நட்டம் ரூபா. 6 பில்லியனை முன்னிலைப்படுத்தி விலை திருத்தத்திற்கான வேண்டுகோளை விடுத்திருந்தது. மேற்கூறியவாறு உள்நாட்டு உற்பத்திகளுக்கு விலை திருத்தம் கோரப்பட்டிருந்தாலும் கூட, மொத்த மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கு LPG வழங்குவதற்கான விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் கம்பனியிடம் இருந்து கூட 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மொத்த மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கு நிகர தள்ளுபடிகள் (மொத்த இழப்பு) வழங்கப்பட்டன. | வணிக விலைகள் சந்தை மற்றும் வணிக சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டவை, மேலும் இது CP விலை, பரிமாற்று விகிதம் மற்றும் போட்டியாளர் விலை ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் திருத்தப்படும். இருப்பினும், வணிகப் பிரிவு 2020/2021 காலகட்டத்தில் கணிசமான லாபத்தைப் பெற்றுள்ளது. இந்த பிரிவு தனிப்பட்ட பிரிவாக செயல்படுகிறது மற்றும் ஒட்டுமொத்த கம்பனியின் செயல்திறனுக்கு எப்போதும் நேர்மறையான லாபத்தை சேர்க்கிறது. | கம்பனிக்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்ப்பதற்கும், அந்தப் பிரிவுகளில் இருந்து போதுமான பங்களிப்பைப் பெறுவதற்கும், மொத்த மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கு செலவு அடிப்படையிலான விலையிடல் முறையை கம்பனி பயன்படுத்த வேண்டும். |

## 3.5 சர்ச்சை தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) வாகனங்கள் மற்றும் சிதைந்த சிலிண்டர்களை அகற்றுதல் | | |
| (i.) அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இல. 2176/19 21 மூலம் மே 2020 அன்று அரசாங்கம் வாகன இறக்குமதிக்குத் தடை விதித்திருந்தாலும் கூட 2020 செப்டெம்பர் 22 மற்றும் 2021 மார்ச் 30 ஆகிய திகதிகளில் முறையே 19 வாகனங்கள் மற்றும் ஒரு வாகனத்தை அகற்றுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. 23 செப்டம்பர் 2020 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கம்பனியின் வாகனக் கொள்கையின் புதிய திருத்தத்தை அங்கீகரித்து நடைமுறைப்படுத்த இயக்குனர்கள் குழு தீர்மானித்ததாகவும், அதன்படி 23 அதிகாரிகளுக்கு பூச்சிய வட்டி விகிதத்தில் ஊழியர் வாகனக் கடன்கள் வழங்கப்பட்டு அந்தக் கடன்களில் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மற்றும் 33 அதிகாரிகளுக்கு பூச்சிய வட்டி விகிதத்தில் வேலை தொடர்பான வாகனக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | கம்பனியின் விவகாரங்களை மேற்கொள்வதில் கம்பனி ஒருமைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் மற்றும் வெளியாட்கள் அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தின் நன்மைகளை எடுத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. |
| (ii.) அந்த 19 வாகனங்களின் மதிப்பு ரூபா.66,450,000 ஆக இருந்தாலும் கூட 19 வாகனங்கள் ரூபா. 50,097,341 க்கு விற்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (VAT இல்லாமல்). எனவே, அவற்றின் மதிப்பீட்டோடு ஒப்பிடும்போது விற்பனை மதிப்பு ரூபா. 16,352,659 குறைவாக உள்ளது. மேலும் மற்றொரு வாகனம் ரூபா.13,425,926 க்கு (VAT இல்லாமல்) விற்கப்பட்டிருந்தது மற்றும் அதன் மதிப்பீட்டை விட ரூபா.1,974,074 குறைவாக இருந்தது. இந்த வாகனங்களை அகற்றும் போது அரசாங்கத்தினால் வாகன இறக்குமதிக்கு தடை விதித்ததன் காரணமாக வாகனங்களின் விலை அதிகரிப்பு பரிசீலிக்கப்பட்டதா என்பது கணக்காய்வுக்கு சந்தேகமாக உள்ளது. | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | |

| | | |
|---|---|---|
| (iii.) புதிய கேள்விமனு கோரலை அழைக்காமல், 2020 செப்டம்பர் 08 அன்று ஒரு கிலோவுக்கு ரூ.65 என்ற விகிதத்தில் சிதைக்கப்பட்ட சிலிண்டரை அகற்றுவதில் வெற்றி பெற்ற கேள்விமனுதாரருக்கே 196,923 கிலோ எடை மதிப்புள்ள சிதைக்கப்பட்ட சிலிண்டர் இருப்பு 04 மார்ச் 2021 அன்று ரூ.7,248,481க்கு (VAT தவிர்த்து) விற்கப்பட்டது. | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியால் அனுப்பப்பட்ட 10 மே 2021 மற்றும் 12 மே 2021 திகதியிட்ட கடிதங்களின் படி, தொற்றுநோய் காரணமாக நாட்டின் அவசரத் தேசியத் தேவையைக் கருத்தில் கொண்டு அவசர தேவைக்காக கையிருப்புகளை உருவாக்க பல்வேறு அளவுகளில் 21,000 மருத்துவ வாயு ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் மற்றும் மருத்துவ வாயு ஆக்ஸிஜன் ஆகியவற்றின் கூடுதல் தேவையை நிவர்த்தி செய்யுமாறு கம்பனி கோரப்பட்டது. மே 13, 2021 அன்று நடைபெற்ற கூட்டத்தில், கம்பனியில் கிடைக்கும் சுமார் 10 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புக்கு ஆக்ஸிஜனை வழங்குவதற்கான ஒரு சிறப்புத் திட்டமாக இதைச் செயல்படுத்த இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்தது. இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.<br><br>(i.) அவசரகால பெறுகை தொடர்பான அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரிவு 3.8.1 இன் படி, வழிகாட்டி 2.14 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நிதி வரம்புகளை மீறும் பெறுகைளை தொடங்குவதற்கு, கிடைக்கக்கூடிய முதல் வாய்ப்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து முறையான ஒப்புதல் பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், பெறுகையின் பெறுமதி ரூபா.500 மில்லியனை விட அதிகமாக இருந்த பெறுகையை ஆரம்பிப்பதற்கு | கம்பனி இயக்குனர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட அவசர பெறுகை முறையின் கீழ் பெறுகை செயல்முறையைப் பெறுகை பின்பற்றுகிறது. US$ 10 மில்லியன் வரவுசெலவுத் திட்டத்திற்குள் எந்தவொரு நிதிச் செலவையும் அங்கீகரிக்கும் அதிகாரம் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒட்சிசன் திட்டத்திற்கு சொந்த நிதியைப் பயன்படுத்துமாறு லிட்ரோ நிறுவனத்திற்கு தொடர்புடைய அமைச்சு தெளிவாகத் தெரிவித்தது. பெறுகையானது, தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கூறுவிலைகளைப் பெற முடிவு செய்து, முறையான TEC & PC ஐ நியமிக்காமல் தலைவர் மற்றும் CEO வின் ஒப்புதலின் அடிப்படையில் PO வழங்கப்பட்டது. மிகக் குறுகிய காலத்திற்குள் அவசரத் தொகைகளை வழங்கத் தயாராக இருக்கும் வழங்குனர்களுக்கு பெறுகை சென்றடைந்தது. கொள்வனவு செய்யும் நேரத்தில் இலங்கையில் இருந்த சந்தை விலைகளுடன் விலை | அவசரகால பெறுகைகளுக்கு அரச பெறுகை வழிகாட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையை கம்பனி பின்பற்ற வேண்டும் மற்றும் பெறுதலை விரைவுபடுத்த தேவையான அனுமதி பெறப்படும். |

| | | |
|---|---|---|
| அமைச்சரவையிடமிருந்து முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | ஒப்பிடப்பட்டது எவ்வாறாயினும், அனைத்து கொள்வனவுகளும் இலங்கையில் தற்போதுள்ள மருத்துவ ஒட்சிசன் சிலிண்டர்களின் சந்தை விலைக்குக் குறைவாகவே செய்யப்பட்டுள்ளன.<br>லிட்ரோவின் விரைவான பதில் காரணமாக, தற்போதுள்ள வீரர்களால் எதிர்பார்க்கப்படும் மருத்துவ ஒட்சிசன் வழங்கல் அதிகரித்துள்ளது. எனவே, தொற்றுநோய்களின் போது மருத்துவ ஒட்சிசன் விநியோகத்தை நிர்வகிக்க இந்த முயற்சி அரசாங்கத்தை ஆதரித்தது. | |
| (ii.) 2.14.1 பெறுகை வழிகாட்டியின் படி மிகவும் அவசரமான மற்றும் விதிவிலக்கான சூழ்நிலைகளின் போது பெறுகை நடைமுறையிலிருந்து விலகியதற்காக 10 மில்லியனுக்கும் அதிகமான பெறுகை செய்வதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். பெறுகை நடைமுறையிலிருந்து விலகியதற்காக கம்பனி அத்தகைய ஒப்புதலைப் பெறவில்லை. | | |
| (iii.) 3.8 அல்லது 2.14 பெறுகை வழிகாட்டியின் படி, தகுந்த பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிக்காமல், மற்றும் பொருத்தமான பெறுகை முறையைத் தேர்வு செய்யாமல், இரண்டு வழங்குனர்களிடமிருந்தும் 4,930 எண்ணிக்கையிலான ஒட்சிசன் நிரப்பப்பட்ட சிலிண்டர்களை கொள்வனவு செய்ய பெறுகைப் பிரிவு முடிவு செய்திருந்தது. | | |
| (iv.) பெறுகை வழிகாட்டியின் 3.8 க்கு மாறாக, 4,930 எண்ணிக்கையிலான சிலிண்டர்களை வாங்குவதற்கு வழங்குனர்களுடன் எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்கவில்லை. | | |
| (v.) பெறுகை வழிகாட்டியின் 5.4.4 க்கு மாறாக, 400 எண்ணிக்கையிலான சிலிண்டர்களுக்கு 62.5% முற்பணம் ரூபா.10.15 மில்லியன் உம், 200 எண்ணிக்கையிலான சிலிண்டர்களுக்கு 100% முற்பணம் ரூபா.7.16 மில்லியன் உம் மற்றும் முற்பணமாக USD 100,000 (ரூபா.20.3 மில்லியன்) 4,330 எண்ணிக்கையிலான சிலிண்டர்களுக்கும் உத்தரவாதம் இல்லாமல் செலுத்தப்பட்டது. | கீழேயுள்ள காரணங்களால் கம்பனி முற்பண உத்தரவாதத்தைப் பெறவில்லை,<br>- மருத்துவமனைகளுக்கு மருத்துவ ஒட்சிசன் சிலிண்டர்களை வழங்க வேண்டிய அவசரம் கருதி, லிட்ரோவுக்கு ஒதுக்கப்பட்ட இருப்பை வைத்து, சிறிது LC உடன் முன்கூட்டியே பணம் வழங்க முடிவு செய்யப்பட்டது. உத்தரவாத | முற்பணம் செலுத்துவதற்கான உத்தரவாதத்தைப் பெறாமல் கம்பனி முன்கூட்டியே பணம் செலுத்தாது. |

| | | |
|---|---|---|
| | செயலாக்க முன்னணி நேரத்தைக் குறைப்பதற்கும் கொள்முதல் முன்னணி நேரத்தை பெரிய அளவில் குறைக்கவும் முன்கூட்டியே உத்தரவாதம் தவிர்க்கப்பட்டது.<br><br>- லிட்ரோ வழங்குனரின் முந்தைய நடத்தையின் அடிப்படையில் அவர் மீது நம்பிக்கை வைக்கிறது. வழங்குனர், வரலாற்றில் எந்த உத்தரவாதமும் இல்லாமல் முன்கூட்டியே பணம் செலுத்திய பிறகு தேவையான பொருட்களைத் தொடர்ந்து வழங்குகிறார். | |
| (vi.) 600 எண்ணிக்கையிலான சிலிண்டர்களுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன், உற்பத்தியின் தரத்தை சரிபார்க்க மாதிரிகள் பெறப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | சரியான நேரத்தில் வழங்கலின் அவசரத்தை கருத்தில் கொண்டு, மாதிரிகள் பெறப்படவில்லை. | பெறுகை செய்வதற்கு முன்னர் உற்பத்தியின் தரத்தை உறுதிப்படுத்த கம்பனி மாதிரிகளைப் பெறும். |
| (vii.) ஒட்சிசன் நிரப்பப்பட்ட நாநூறு (400) சிலிண்டர்கள் வழங்குனர்கள் மூலம் வழங்கப்பட்டன. இருப்பினும் அந்த சிலிண்டர்கள் சரியாக பராமரிக்கப்படவில்லை மற்றும் பாரிய பாவனைக்குட்பட்ட சிலிண்டர்கள் மற்றும் அது உள்நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமத்தில் இருக்கவில்லை. வழங்குனரின் அலட்சியமான நடத்தை காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட மொத்த மதிப்பிடப்பட்ட சேதம் USD 126,782 என்றும், அந்தத் தொகையை வழங்குனரிடமிருந்து தீர்த்துக் கொள்ளுமாறு கம்பனி கோரியதாகவும் மேலும் கூறப்பட்டது. 23 யூன் 2021 திகதியிட்ட மின்னஞ்சல் மூலம் 47 லிட்டர் கொள்ளளவு கொண்ட 100 எண்ணிக்கையிலான சிலிண்டர்களை வழங்க வழங்குனர் ஒப்புக்கொண்டார். எவ்வாறாயினும், 47 லிட்டர் கொள்ளளவு கொண்ட | பெறப்பட்ட மருத்துவ ஒட்சிசன் மருத்துவ விநியோகப் பிரிவால் அங்கீகரிக்கப்பட்டது. விஷேட TEC ஆனது பெறப்பட்ட சிலிண்டர்களை பரிந்துரைத்து அதன்படி சரிபார்க்கப்பட்டது. வழங்குனர் FOC அடிப்படையில் 100 எண்ணிக்கையிலான சிலிண்டர்களை அனுப்ப ஒப்புக்கொண்டாலும். சிங்கப்பூரில் இருந்து கொழும்புக்கு அனுப்பப்படும் EXW இறக்குமதியை கையாளும் திறன் லிட்ரோவுக்கு இல்லை என்பதால், இந்த அளவை வாங்க வேண்டாம் என முடிவு செய்யப்பட்டது. மற்றும் லிட்ரோ மூலம் மருத்துவ ஒட்சிசனை நிரப்பும் செயல்பாட்டில் சிக்கல்கள் இருந்தன. | இந்த பெறுகையில் கம்பனியால் ஏற்கப்படும் இழப்பை மீட்டெடுக்க கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சிலிண்டர்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட 100 எண்ணிக்கையிலான அல்லது சேதமடைந்த பொருட்களின் இழப்பை ஈடுசெய்வதற்காக கோரப்பட்ட இழப்பீடு கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை. | | |
| (viii.) | பெறுகைப் பிரிவு கோரியிருந்த கொள்வனவு ஆணையானது சுகாதார அதிகாரிகளிடமிருந்தான ஒப்புதல்கள் மற்றும் பிற தளவாட ஏற்பாடுகள் தாமதமான காரணத்தால் ரத்து செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், தளவாடங்களுக்காக மற்றும் நிரப்புதல் செலவுகளுக்காக ஏற்பட்ட கிரயம் காரணமாக வழங்குனர் ரத்து செய்வதை ஏற்கவில்லை. மேலும், கொடுப்பனவு செலுத்தும் திகதியில் அவர்களால் ஏற்பட்ட அனைத்து செலவுகள்/கட்டணங்களுடன் அவர்களின் மீதிக் கொடுப்பனவாகிய USD 583,790 ஐ மீளப்பெறுவதற்கு 08 நவம்பர் 2021 அன்று கம்பனிக்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இதன்படி, USD 100,000 ஐ முற்பணம் செலுத்தியதன் மூலம் கம்பனி ஏற்கனவே ரூபா.20.3 மில்லியன் நட்டத்தைச் சந்தித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. | விவரிக்கப்பட்டுள்ள படி, தொற்றுநோய்களின் போது மருத்துவ ஒட்சிசனைப் பெறுவது எளிதானது அல்ல, ஏனெனில் மருத்துவ ஒட்சிசனுக்கான முழு உலகத் தேவையும் அதிகரித்திருந்தாலும் விநியோகம் குறைவாகவே இருந்தது. அதற்கு மேலதிகமாக மருத்துவமனைகள் சார்பாக பாதுகாப்புப் இருப்புக்களை வைத்திருக்குமாறு லிட்ரோவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது, மேலும் மருத்துவ ஒட்சிசனை அவசர அடிப்படையில் வாங்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம், எனவே, மேலும் தாமதமின்றி முன்கூட்டியே கட்டணத்தை செலுத்த முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், வணிகத்தின் தன்மை காரணமாக வெளிப்படும் முரண்பாடுகள் காரணமாக ஒப்புதல் செயல்முறை தாமதமானது. வர்த்தக தன்மையின் கீழ் அரச மருத்துவமனைகளுக்கு மருத்துவ ஒட்சிசன் வழங்கலை மேற்க்கொள்ள முறையான வணிக உரிமம் தேவையாகும். எனவே, கட்டளையை ரத்து செய்ய முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், அதிகார பீடங்கள் மற்றும் லிட்ரோ முகாமைத்துவக் குழுவால் இது அங்கீகரிக்கப்பட்டால், சிலிண்டர்கள் வழங்குனர் இடத்தில் இன்னும் அனுப்ப தயாராக உள்ளன. | கம்பனி உரிய அதிகாரியுடன் கலந்தாலோசித்து, மற்றும் கட்டளை செய்யப்பட்ட பொருட்களைப் பெறுவதற்குத் அல்லது வழங்குனருக்குச் செலுத்தப்பட்ட தொகையை மீட்டெடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (b.) 01 மார்ச் 2020 முதல் 28 பெப்ரவரி 2022 வரையான இரண்டு ஆண்டுகளுக்கு LPG இன் வழங்கலுக்கான பெறுகை. | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | அந்தந்த அதிகார பீடங்களும் கம்பனியும் நிறுவனத்திற்குள் நெறிமுறைக் கலாச்சாரத்தை ஊக்குவிக்க வேண்டும் மற்றும் கம்பனியில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மேம்படுத்தி, பெறுகை நடைமுறைகளை வெளிப்படைத் தன்மையில் நடத்த வேண்டும். |
| (i.) கேள்விமனு கோரல் ஆவணங்களில் உள்ள தேவைகளின் அட்டவணையின் பிரிவு 7(a) இன் படி, CIF விலையானது, ப்ரோபேன் மற்றும் பியூட்டேனுக்கான பரிந்துரைகளின் மாதத்தின் சவுதி ஒப்பந்த விலை (CP) மற்றும் சரக்கு மற்றும் ஒரு MT க்கான காப்பீட்டு கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டது. மற்றும் கேள்விமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்களின் (ITB) பிரிவு 14.2 இன் படி, விலை அட்டவணையில் உள்ள ஏதேனும் ஒரு பொருளுக்கு எதிராக ஏதேனும் தள்ளுபடி அல்லது அதிக அளவில் தள்ளுபடி கேள்விமனுதாரரால் வழங்கப்படலாம். மேற்கூறிய உட்பிரிவுகளுக்கு மாறாக, தகுதிவாய்ந்த கேள்விமனுதாரர் CP க்கு தவணைப்பணத்தை சமர்ப்பித்திருந்தார். [ தகுதியான கேள்விமனுதாரரின் நிதி கேள்விமனு CP + 54 USD (CP க்கு தவணைப்பணமாக) + 52.9 USD (சரக்கு மற்றும் காப்பீட்டு கட்டணமாக) இருந்தது. | | |
| (ii.) கேள்விமனு தரவுத் தாளின் ITB 35.4 பிரிவின் படி, நிதி கேள்விமனுவை மதிப்பிடுவதில், பொருந்தக்கூடிய ITB உட்பிரிவுகளின்படி கேள்விமனு விலையை சரிசெய்வதன் மூலம் ஒவ்வொரு கேள்விமனுக்கான மதிப்பிடப்பட்ட கேள்விமனு விலையை தொழில்வழங்குனர் தீர்மானிப்பார். எந்தவொரு மாறுபாடு, விலகல் அல்லது மாற்று சலுகையை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்கும் உரிமையை வாங்குபவர் கொண்டுள்ளார். கேள்விமனு ஆவணத்தின் தேவைகளை விட அதிகமாக இருக்கும் மாறுபாடுகள், விலகல்கள், மாற்று சலுகைகள் | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | |

| | | |
|---|---|---|
| | மற்றும் பிற காரணிகள் கேள்விமனு மதிப்பீட்டின் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படாது. விதிகளுக்கு மாறாக, இரண்டு ஆண்டு கால ஒப்பந்தத்திற்கான CP ஐத் தவிர நிலையான விகிதமாக மேற்கோள் காட்டப்பட்ட CP க்கு தவணைப்பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (iii.) | மார்ச் 2020 முதல் டிசம்பர் 2021 வரையிலான உண்மையான இறக்குமதி செய்யப்பட்ட LPG இன் அளவின் படி, CP க்கு தவணையாக USD 34,610,800.5 செலுத்தப்பட்டிருந்தது. (640,940.75MT X 54 USD) மற்றும் அது ஒரு அமெரிக்க டாலருக்கு ரூ.194.08 என்ற சராசரி நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் அண்ணளவாக ரூபா.6.72 பில்லியன் ஆகும். | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. |
| (iv.) | “இது சரக்கு மற்றும் காப்பீட்டுக்கான அதிக போட்டி விகிதங்களை கம்பனிக்கு வழங்கும், ஏனெனில் அளவு அதிகமாக இருக்கும்” உள்ளிட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு, 03 அக்டோபர் 2019 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் LPG விநியோக ஒப்பந்தத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க இயக்குனர் குழு தீர்மானம் நிறைவேற்றியது (முந்தைய ஒப்பந்தம் ஒரு வருடத்திற்கு வரையறுக்கப்பட்டிருந்தது) மற்றும் 27 டிசம்பர் 2019 அன்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில் இது அங்கீகரிக்கப்பட்டது.<br>எவ்வாறாயினும், CP க்கு தவணைப்பணத்தை (premium) சமர்ப்பித்து ஏற்றுக்கொண்டதன் காரணமாக LPG விநியோக ஒப்பந்தத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பதன் மூலம் மேற்கண்ட நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. |

| | |
|---|---|
| (v.) இந்த பெறுகையில் இறுதி பரிசீலனைக்கு ஒரே ஒரு கேள்விமனு மட்டுமே இருந்தது, 10 கேள்விமனுதாரர்கள் கேள்விமனு ஆவணங்களை வாங்கியிருந்தும் மற்றும் நான்கு கேள்விமனுதாரர்கள் தங்கள் கேள்விமனுவை சமர்ப்பித்திருந்தும் கூட, சரியான போட்டியின்றி இறுதி முடிவு பெறப்பட்டது. இது இயற்கையின் ஒரு பெரிய விநியோகத்திற்காக இருக்க வேண்டும். | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. |
| (vi.) LPG இன் வழங்கலுக்காக உருவாக்கப்பட்ட முந்தைய உடன்படிக்கை 29 பிப்ரவரி 2020 அன்று முடிவடைந்தாலும் கூட, 2020-2022 ஆம் ஆண்டிற்கான LPG இன் விநியோகத்திற்கான பெறுகை அறிவிப்பு 20 அக்டோபர் 2019 அன்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 04 டிசம்பர் 2019 அன்று கேள்விமனு திறக்கப்பட்டிருந்தது மற்றும் இறுதி SCAPC கூட்டம் 02 ஜனவரி 2020 அன்று நடைபெற்றது. எனவே, கால வரையறை காரணமாக நிதி கேள்விமனு மதிப்பீடுகளுக்கு முறையான போட்டி உருவாக்கப்படாத சூழ்நிலையிலும் கூட கேள்விமனுக்கான மீள்அழைப்பு வாய்ப்புகள் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சபைக்கான நியமனங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20 ஜனவரி 2020 திகதியிட்ட கடிதத்தின் மூலம் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை மேம்பாட்டு அமைச்சரால் கம்பனியின் நிர்வாக இயக்குனராக சபை உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் கம்பனி செயலாளர் முறையே அனுப்பிய 2020 ஜனவரி 22 மற்றும் 2020 பெப்ரவரி 13 ஆம் திகதியிட்ட கடிதங்களின் படி, முகாமைத்துவப் பணிப்பாளராக நியமனம் செய்வதற்கான மேற்படி நியமனம் ஒத்துழைக்கப்பட்டது. | இதேபோல், நிர்வாக இயக்குனரின் அலுவலகம் உட்பட தகுந்த விளிம்புநிலைப் நலன்களுடன், நிர்வாக அலுவலகத்தின் உரிமையாளராக தங்கள் அமைப்பில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களை சபை அவ்வப்போது நியமிக்கலாம் என்று உறுப்புரைகள் வழங்குகின்றன. நிர்வாக இயக்குனர்/ CEO ஆக | குழுவிலுள்ள வலு மற்றும் அதிகாரத்தின் சமநிலையை உறுதிப்படுத்த, குழுவின் தலைவர் மற்றும் கம்பனியின் செயல்பாடுகளின் தலைவர் ஆகியோரின் பொறுப்புகளை தெளிவாகப் பிரிப்பது பரிந்துரைக்கப்படுகிறது, அதுபோல் ஆளுகைக் கொள்கைகள், |

திறைசேரியின் நியமனத்திற்கு மாறாக, 21 பிப்ரவரி 2020 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் இயக்குனர்கள் குழுவால் அவர் கம்பனியின் நிர்வாக இயக்குனராக நியமிக்கப்பட்டார். மேலும் 99.94 சதவீத பங்குதாரரும், கம்பனியின் இறுதி பெற்றோருமான திறைசேரியின் மேலே குறிப்பிடப்பட்ட நியமனத்திற்கு மாறாக, 21 பிப்ரவரி 2020 அன்று நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கம்பனியின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக (நிர்வாக இயக்குனரைப் போன்றவர்) திறைசேரியின் மேற்குறிப்பிட்ட நியமனத்திற்கு மாறாக முன்னால் தலைவர் நியமிக்கப்பட்டார்.

நியமிக்கப்பட்ட ஒரு இயக்குனர் பணிநீக்கத்திற்கு உட்பட்டவராவார். LGLL மற்றும் LGTLL ஆகியவற்றின் பிரதான பங்குதாரர் திறைசேரி அல்ல அதன் ஸ்ரீ லங்கா காப்புறுதி கூட்டுத்தாபனமானது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவேதான் நிதி அமைச்சானது SLIC தலைவருக்கு நேரடியாக நியமனம் செய்ய வேண்டும் மற்றும் SLIC இன் இயக்குனர்கள் குழுவானது, முறையாக அமைக்கப்பட்ட குழுக் கூட்டத்தில் அதே நியமனத்தை முடிவு செய்து ஒப்புதல் அளிக்க வேண்டும், பின்னர் SLIC அனைத்து நியமனங்களையும் LGLL மற்றும் LGTLL இன் இயக்குனர்கள் சபைக்கு தெரிவிக்க வேண்டும். தலைவர்/CEO நியமனத்தில் வலு மற்றும் அதிகாரம் முற்றிலும் கம்பனியின் இயக்குனர்கள் சபையிடம் வழங்கப்பட்டுள்ளது.

பயனுறுதிவாய்ந்த தீர்மானம் மேற்க்கொள்ளுதல் மற்றும் கம்பனியின் விவகாரங்களின் பயனுறுதிவாய்ந்த செயல்பாடு ஆகியவற்றுடன் முரண்படுவதைத் தவிர்ப்பதற்காக குழுவில் ஆதிக்கம் செலுத்தும் தீர்மானத்தின் தடையற்ற அதிகாரம் எந்த ஒரு தனிநபருக்கும் இல்லை.